595 650 மி.லி. நெய் சேர்த்து அதனுடன்
பாடல் எண் 291 இந்த மருந்துகளைச் சேர்த்து வைத்து
மெல்லிய தீயில் ~~[illegible]~~ அரக்கு
~~[illegible]~~ கொண்டு எரிக்கவும். கிளறி வந்து
மெழுகுப் பதமாய் பயன்படுத்தவும். கடைசி
பதமாகும் போது (கரண்டி தேக்கரண்டி) இறக்கி கொள்ளவும். ஆறிய
பின் புட்டிகளில் அடைத்து வேண்டிய அளவு
பருகிக் கொள்ளவும்.

596 உடம்பிலுள்ள எல்லா காயங்களையும்
பாடல் எண் 291 ~~[illegible]~~ போக்கும் இம்மருந்து ~~காயங்களை~~
இதனைத் தடவித்து குணமாகும்
உண்டு வரவும், காயங்களுக்கு.

தொடர்ந்து 17 நாட்கள் உட்கொண்டால்

597 போது நரைமாறி முடிகள் கறுப்பாகத் தழைக்கும்.

பா.எண் 291 குருமேகத் தாக்கம், சிலேட்டுமத்தால் ஆகும் வெப்பம். [illegible]

[illegible], [illegible], [illegible], [illegible], சிவா எலும்பு மேகங்கள்

போகு உடல், கை, கண்ணாடிக்கட்டு, இல்லாதிரை வைத்து ~~போகாத~~

பலவற்றைப் போக்கும். இத்தத்தின் காயகற்பமாகும் உடல்.

598 இம்மருந்துகளும் சாதிக்காய், புளிப்பு,

புகையிலை, உப்பு, புண் நெய், நல்லெண்ணெய்

பா.எண் 292 சுண்ணாம்பு இவற்றை நீக்கவும். அபாய லேசமாக, பகல்

தூக்கம், ~~[illegible]~~ நீக்க வேண்டும். காமக்

குரோதம் ஆகாது. பெண்களின் சேர்க்கை ஆகாது.

இவ்வாறு கடைபிடித்து மருந்து உண்டால்

8/3 3/1/01 பெரும் சித்திகளைப் பெறுவர் என்பதாகும்.

[illegible] 17/1/01.

A1 (பா.எண் 361)

இன்னமான் தீபம் பார்த்தற்கு எதுவான
பற்களை நிறுத்தச் செய்வோன். மனம்கொண்டு
முகூர்த்தவேளையில் ஞானக்கண் திறந்து, கூட்டம்
சேர்க்காமல் தானே தனித்து நின்று ஜெபித்து வரும்
நிறைமாந்தர்க்கு தெளிவுதற்கு திருமலையுடன்
நின்றுள் நிற்பர் உயர்ந்தோர். 599

A2 (பா.எண் 362)

சுத்திகரிக்கப்பட்ட தேவர்கள், வாழ்வாங்கு,
திருப்பு இவை சில அளவு எடுத்து (மற்றும்)
தெவருப்புச் சுண்ணம், (மற்றும்) அதிமதுரம், கூடன்
இவை 1, 1/2, 1/4 என்ற வகிதத்தில் எடுத்துக்
கலந்து கல்வத்திலிட்டு பொடித்து சுத்தி
நீரில் அரைத்தெடுத்துக் கொள்ளவும். 600

A3 (பா.எண் 363)

அதனை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி
நிழலில் உலர்த்திக் கொள்ளவும். பின்னர்
தேய்த்தவுடன் ஒரு பாத்திரத்திலிட்டு மூடி
திரை செய்து புடம்போட பற்பமாகிவிடும். 601

பற்பத்தரைப் பத்திரப்படுத்தி, மனனம்
(கற்பத்தரு)

பா.எண் 364 காத்தி இம்மருந்தை உட்கொள்ளும் போது
சுக்கு, திப்பிலி தலைக்கு 500 மிகி அளவு
உட்கொண்டால் தேகம் வலுப்பெறும். யாதி
போகம் கிட்டும். 602

கல்
பா.எண் 365 சுண்ணம் அதே அளவு தம்பயப்பு,
இதில் பாதியளவு படிகாரம், இதில் பாதியளவு
கல்
சுண்ணத்தில் காய்ச்சி பொடு கற்பூரம்.
இவற்றை வேப்ப தண்ணீரில் அரைத்து உண்டை
செய்து வெயிலில் காயவைத்து எடுக்கவும். 603

இந்த ஒரு மாத்திரைக்கட்டு,
நீரைமண் செய்து, குறையாமை நோக்கி
பா.எண் 366 பூசை செய்து புடம் போடவும். புடம் ஆறியவுடன்
எடுத்துப் பார்த்தால் நீறாக மாறி
சுண்ணமாகியிருக்கும். இதனைப் பதனமாகப்
பீங்கானில் அடைத்துக் கொள்ளவும். 604

A6 முனைதூராங்கனில் சான்றான அழிமையை
மனதை வைத்து ஊசி மீதி. அதை சேர்ந்து
பா.எண் 367 சொன்ன அர்ணாத்தை அதிகாலையில் உன்னை
வேண்டும். மாலையில் பெற்றுக்கொள்ள
பருபத்தைத் சாப்பிட வேண்டும். இவ்வாறு
பனைகட
உண்டு வந்தால் தேகம் வஜ்ரம் போல் 605
கனைப்படும்.

A7 இச்சற்பங்களை உண்பதால் ஞாபகசக்தி
உள்ள சில அனுகூலங்களும். உறக்கம் என்று
பா.எண் 368 சொல்லப்படுகின்ற தூக்கமானது அகன்று போகும்.
நரை, திரை, மூப்பு மாறி இளமை மாறாது
16 வயது போல் தோற்றமளிக்கும். தேகமானது
வஜ்ரம் போல் வன்மை பெறும். 606

523 - சந்திரனாதர் பாக்கியம்

A8 ஒரு தசகாலப்பூண்டு, ஒரு மைப்பூண்டு
A8 இவற்றை தப்பைமேனிச்சாற்றில் தூவாலையாட்டு
பா.எண் 251 உலர்த்திக் கொண்டு, அதனை இடித்துச் சூரணமே
போது மீண்டும் இப்பானையிட்டு உலர்த்திக்
கொண்டு நான் பசுவையைப் பிடித்து வருவதும் 607
கொள்வேன்.

A9 திரிகடுகு, திரிபலை, திரிபலாதி, கடுகு
ரோகிணி, சீரகம், மாசிக்காய், சாதிக்காய் இந்துப்பு,
பா.எண் 252 தேவதாருயம், கோரைப்பு, ஏலம், மிளகு, உலர்ந்த,
இலவங்கபம், கீரைவிதை, கசகசாவிதை, சம்பாவிதை,
பூசணிவிதை, தாமரைவிதை 608

A10 சேர்வாளம், பூண்டு, வெள்ளை (நொச்சி) வேர்?
ஆகிவேர் அனிச்சவித்து, காரம், புங்கைக்காய்
வித்து, முன்னைவித்து, கொடிவேலி வித்து, கொத்தி
வித்து, வேர், ஆமணக்கு வித்து, பரங்கிப்பட்டை
பா.எண் 253 வேப்பம் விதை, பருத்தி விதை, சித்ரா விதை,
சிறுமுன்னை வேர், கொடுப்பை வித்து, 609

A11 தனமுந்திரி கோரத்தம் விதை, தொம்மட்டி விதை
தொட்டிவெல்லா வேர், மலைத்தாங்கி விதை,
எலுமிச்சம் ~~விதை~~ விதை, அமுஞ்சி விதை,
பா.எண் 254 கடுப்பண்ட விதை, அபிராம், தெள்ளரி
பாதாணம், அந்திரக்கம், தங்கஞ்சிவகம், சீனி, 610
கருப்பட்டி கட்டி

A12 குவர்ச்சு சங்கு வெந்து இருந்து
பொடிசெய்து தென்கட்ட சிவிதநீர்க்கண்டு வெந்து
பா.எண் 255 இறுத்து மைமெருகு போல் ஆக்கிக் கொள்ளவும். 611

இதனைச் சுண்டைக்காயளவு உருண்டை செய்து காய வைத்து சீசியில் அடைத்துக் கொள்ளவும். நாள்பட்டு அதிகமான மூலம் மற்றும் இரத்தக்கசிவைக் கட்டுப்படுத்த பல்வகும் நோய்கள் தீரும். 8

A13 மகோதரம், சோகை, பாண்டு இவற்றிற்கு

பா.எண் 256 திரிகடுகத் தூளில் உட்கொள்ளவும். 40 நாட்கள் காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் உட்கொள்ளவும். 612

~~A13~~ A14 உடல்வலிகள் யானை, இரத்த பேதிகள், சுரம், பாதம், இருமல் வாதங்கள், அண்டவாயு,

பா.எண் 257 பத்துவகை வாயுக்கள், வெறுகடி, நீர்வாகு கானாக்கட்டிகள், நீர்வறைக்கற்கள், இரத்தசோகை கருங்கிரந்தி, படர்தாமரை போன்ற நோய்கள் தீரும். 613

A15 குஷ்டநோய் கிட்டம், சிரங்கு, அரிப்புகள்,

பா.எண் 258 கண்டமாலை, உடல்வலி, மேகம், கருங்குட்டம், சிரங்கு, தொழுநோய், தோல் சம்பந்தப்பட்ட புண்கள் காயங்கள் போன்றவை குணப்படுத்த ஏற்ற மருந்து என்றும். 614

A16

[illegible] [illegible] அண்டப் [illegible] [illegible],
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] அப்பன் [illegible] [illegible]
[illegible] எட்டுவகை [illegible] ~~[illegible]~~ [illegible]
[illegible]. 40 நாட்கள் இருந்து [illegible]
[illegible] [illegible] உட்கொண்டால் [illegible]. 615

பா.எண் 259

A17

[illegible] [illegible] [illegible]
முதல் 160 நாட்கள் வரை
கோதுமைக்கு
9 நாட்கள் சிறுபயறும், [illegible] ~~[illegible]~~
மணி
~~[illegible]~~, 160 நாள் [illegible], [illegible]
[illegible] [illegible] நாட்கள், 4 [illegible]
3 [illegible] உட்கொண்டால் [illegible]. 616

பா.எண் 260

29/12/2[illegible]

எழுத்துவைப்பு

மூலிகைகற்பம் பக்கம் - 66, 67

523. சுந்தரானந்தர் வாக்கியம்

சுவடி எண் | நூலின் பெயர்

அகத்தியர் மெய் ஞானம் ✓
✓1) 152

வைத்திய அட்டவணை. ✓
✓2) 806

சித்தமுறைச் சுவடி - பலவகை ✓
✓3) 523 மருந்துகள்

தக்ஷிணாமூர்த்தி காவியம். ✓
✓4) 343

இராமதேவர் பலதிரட்டு. ✓
✓5) 3715

ரோமரிஷிப் பாடல் 515. ✓
✓6) ~~ரோமரிஷி~~ 227

திருமூலர் 500. ✓
✓7) 600

அனுபவ வைத்தியம். ✓
8) 341

ரோமரிஷி பாடல் (S.O.No.154)
✓9)

அகத்தியர் பெருநூல் மெய்ஞானம் ✓ கிரந்தம் இல்லை நீக்கப்பட்டது
~~அனுபவ வைத்தியம்.~~
✓10) 136 ~~301~~

தன்வந்திரி காவியம் 800 ✓
✓11) 594

வரநிதி 500 ✓
✓12) 463

அகத்தியர் வைத்தியம் - 1200. ✓
13) 2 ✓

அகத்தியர் வைத்தியக் காவியம். ✓

தன்வந்திரி வைத்தியத் தண்டகம். ✓
✓14) 578

தன்வந்திரிக் கலைக்கியானம்.
✓15) 710

தக்ஷிணாமூர்த்தி காவியம்.
✓16) 550

தக்ஷிணாமூர்த்தி பாகம் I.

சித்தமுறை மருத்துவச் சுவடி - பாகம் I.
✓17) 612

கொங்கணர் வைப்பு நூல் (புத்தகத்திலேயே உரை எழுதப்பட்டுள்ளது)
✓18) 467

அகத்தியர் நாடி.
19) 71

எண்: 65 சு. எண். 523. கைமுறைச்சுவடி

71. தொட்டிவைப்பு (தாது)

பாடல் எண் 694

தொட்டிப் பாடாணத்தை வைப்பாக செய்யும் முறையைக் கீழ்வருமாறு. சீனக்காரம், சாரம், வெடியுப்பு, இரசம், நாகம் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளவும். இவற்றின் எடைக்குக் காந்தத்தைச் சேர்க்கவும். அனைத்துச்சரக்குகளை-யும் முட்டையின் வெண்கருவால் அரைத்து இரும்பி-னால் செய்யப்பட்ட அகலில் வைத்து மூடவும்.

72. இருப்பகலை ஒரு சட்டிக்குள் வைத்து அதன்மேல் உப்பினைப் போட்டு மூடவும். அடுப்பேற்றி அதன் மேல் சட்டியை வைத்து ஒன்பது மணிநேரம் எரித்துக் கொள்ளவும். சரியான நேரம் சென்ற பிறகு ஆறிய அடன் எடுத்துப் பார்க்க தொட்டிப் பாடாணமும் ஆகியிருக்கும்.

பாடல் எண் 695

73. தொட்டிப் பாடாணத்தின் முறைமைகள் கீழ்வருமாறு நாகத்தைக் கட்டும், தங்கக் இருவாகும், வெள்ளி செம்பில் கொடுத்துப் பார்த்து குருவினைக் காத்து பூரணத்திலும் கொண்க. இந்தாளை அறிவோர்கள் வித்தையையும் அறிந்து கொள்வார்-கள்.

பாடல் எண் 696

பாடல் எண் 697

74. இதயக் கமலத்தை அறிவால் அறிந்து பூரணத்தை நோக்கவும். செய்யும் செயலினை அறிந்து உடலினைத் தேற்றிக் கொள்ளவும். வச்சிரகாயம் போல ஆக்கிக் கொள்ளவும். கற்பம், காயகற்பம் என்பதை அறிந்து மனதையும் அறிந்து நீ பார்க்கவும்.

பாடல் எண் 698

75. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதப் பொருட்களையும் நன்கு அறிந்து அதனைக் கருத்தாகக் கொண்டு பூசை செய்து கொள்வாய். அப்போது உனக்கு நிகர் இவ்வுலகில். யாரென்று கூற முடியாது. அப்போதும் ~~[illegible]~~ இறைவனை நீ மறந்திடாதே.

சிங்கி வைப்பு

பாடல் எண் 699

76. சிங்கி வைப்பின் செய்முறை ~~யை~~ கீழ்வருமாறு, வெடியுப்பு, சீனக்காரம், காரம் ஆகிய வற்றை எடுத்துக் கொள்ளவும். இம்மூன்றின் எடைக்குச் சமமாக நாகத்தைச் சேர்த்துக் கொள்ளவும். துருசினைக் கல்பங்களவு எடுத்து ஒன்று கலந்து பூக்குகையில் வைத்தால் மருந்துச் சரக்குகள் உருகி குழம்பாகி இருக்கும்.

77. குழம்பான பக்குவத்தில் குகையினை எடுத்துப் பார்க்கவும்.
தரையில் ~~உலர்த்தி~~ தளம் போல் தீர்த்து அதில் துண்டு துண்டுகளாய் அறையும் வண்ணம் வைக்க.
ஓலை எண் 700 பின் ஆறி அது இறுகும் போது உடைத்து எடுக்க துண்டு
துண்டு ~~களாய் அமைத்து~~ மிருதார் சிங்கி யாகும். வேதைக்குப்
பயன்படும்.

78. சிங்கியின் முறை கீழ்வருமாறு. செம்பு வெள்ளி,
ஓலை எண் 701 பொன் ஆகியவை மூன்றையும் குகையில் போட்டு
உருக்கும் பொழுது சிங்கியை அதில் போட்டுக்
கொள்ளவும். சிங்கியானது இவை மூன்றுடன் சேர்ந்து
கொள்ளும். இவையின் நான்குமொன்றாய் சேர்ந்து உருகிக்
கொள்ளும்.

79. சிங்கிக் கட்டினைக் கல்வத்தில் போட்டு பொடித்துக்
ஓலை எண் 703 கொள்ளவும். அதனுடன் சங்கோலைத் தயிலத்தைச் சேர்த்
தரைத்து அதனுடன் சூதம், நாகம், இலிங்கம், காந்தம், அயம்
ஆகியவற்றைச் சேர்த்து பன்னிரெண்டு மணிநேரம்
அரைத்துக் கொள்ளவும். மெழுகாகும்.

80. இம்மெழுகில் காணியளவு எடுக்க. வெள்ளியில் காணி
ஓலை எண் 704 அளவு எடுக்க. இம்மெழுகைத் தங்கத்தாய் என்று தான்
சொல்ல வேண்டும். ~~உடனே~~ வச்சிரமாக ஆக்க
இது பயன்படும்.

காயாதி கற்பம், வல்லாரை

பாடல் எண் 705

81. காயாதி கற்பத்தைச் செய்யும் முறை, கீழ்வருமாறு வல்லாரைக் கீரையைப் பறித்து ஆறுமாதம் வைத்துக் கொள்ளவும். பின்னர் ஆறாம் மாதத்தில் பொடித்து கலசத்தில் போட்டு வைக்கவும். இத்தூளினை 5 கி அளவு உட்கொள்ள உடலானது வலுப்பெறும்.

பாடல் எண் 706

82. மேற்குறிப்பிட்ட சூரணத்தினைத் தொடர்ச்சியாக சாப்பிட வேண்டும். அப்போது நரை இல்லை; திரையில்லை; இறப்பு இல்லை. மற்றுமொரு முறை கீழ்வருமாறு. கடுக்காயை அமுரி எனும் சிறுநீரில் ஊற வைக்கவும். ஒரு நாள் முழுதும் ஊறிய பின் மறுநாள் எடுத்து உலர வைத்துக் கொள்ளவும். இவ்வாறு பத்து முறை சுத்தி செய்து கொள்ளவும்.

பாடல் எண் 707

83. சுத்தி செய்யப்பட்ட கடுக்காய் செம்மையான கடுக்கா-யாகும். கடுக்காயைப் பக்தியுடன் இடித்து வடிகட்டி கரகத்தில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். பின் பூரணத்தை வணங்கி இரேசகமும் பூரகமும் செய்து கொண்டு கும்பகத்தில் இருந்து வேதாந்த கற்பமான இதை ஏற்றுக் கொள்ளவும்.

84. காலையில் வல்லாரையையும் (தூரணம்) நண்பகலில் மதியத்தில் அமுதையும், மாலையில் கடுக்காயையும் (தூரணம்) மூவிரலளவு எடுத்து சாப்பிடவும். நண்பகலில் மதியத்தை அமுது உட்கொள்வதற்கு நாளொரு வழிமுறையைக் கூறுகிறேன். கேட்பீராக! பல், கால், முகம் இவற்றைத் தூய்மை செய்து விபூதியை நன்கு பூசிக் கொள்ளவும். பா.எண் 708

85. பிறகு இரண்டெழுத்து மந்திரத்தைச் சேர்த்து கூறி உணவைச் சாப்பிட வேண்டும். விருப்பத்துடன் உணவையும் சிறு பயிறினையும் சர்க்கரையையும் பழத்தையும் சாப்பிட வேண்டும். விருப்பமான பொருட்களை உட்கொள்ள வேண்டும். கடுக்காயின் வன்மையறிந்து கொடுக்க காயசித்தும் யோகமும், சித்தியாகும். பா.எண் 709

—

எண் 56 343. தெ.4. தெட்சிணாமூர்த்தி சாலம்

வல்லாரை கற்பம்

86. கெந்தகம் 350கி எடுத்து கழுதைச்சிறுநீர் 5கி ஊற்றிக் கொள்ளவும். இவற்றை நாயகிச சாற்றால் அரைத்து அதில் 130மி.கி அளவு மருந்தைச் சாப்பிடவும். அவ்வாறு தினந்தோறும் சாப்பிட உடலானது பொன் நிறமாகும். பலவும் போன்-றாகும். அவ்வாறே நாற்பது நாட்கள் சாப்பிட நோயில்லை. பா.எண் 54

பாஷாண கற்பம்

87. திராவகம் 5கி வெள்ளைப்பாஷாணம் 350கி, ஆகிய இரண்டையும் எடுத்து ஆலம்பால் ஊற்றி அரைத்து அதில் 130 மி.கி அளவெடுத்து உட்கொள்ளவும். அவ்வாறே 48 நாட்கள் உட்கொள்ள சித்தியாகும். வாழ்நாளில் வீணாகத் திரிந்து கொண்டிராது கற்பத்தைத் தேட வேண்டும்.

பா.எண் 55

88. சித்தர்கள் மலைகள்தோறும் உள்ள மூலிகையினின்று மருந்துகள் செய்யும் முறையைக் கேட்க கீழ்வருமாறு. அகத்தியர் மலையில் இருக்கும் கருங்குதம்பை இருந்து, கருவீழி, வெண் கொடிஞ்சி, விஷ்ணுமூலி, கருவாகை ஆகிய மூலிகைகள் சாலவித்தை, இந்திரவித்தைசெய்ய பயன்படும்.

பா.எண் 56

89. தாமரை கருப்பாகும். இருக்கத்தப்பூவும் அங்குள்ளது. சித்தர்களும் அமுது சாப்பிடுவதற்கேற்றவாறு சாவல் கெந்தி -யும் உண்டு. வேடுவர்கள் கண்ணாடியின் நிழல் போல் தெரிவர். அகத்தியர் மலையில் திரவியங்கள் அங்கங்கு பரவியுள்ளன.

பா.எண் 57

90. குருவின் பெயரைச் சொல்வோம். இம்மலையில் பல வளங்களுண்டு. செடி, பூண்டுகள் என்று உண்டு வெண்கொடிஞ்சி வேரிருந்தால் அதனின்று இளிசம் செய்யலாம். இம்மூலிகையினால் பேய்கள் ஓடும். நெருப்பையும் தடுக்கும். இதுவும் ஒருவகைச்சித்தாகும்.

பா.எண் 58

91. கருங்குதம்பை இலைச்சாற்றைப் பளபளப்புடன் இரும்பு எரியும் பாளத்தில் ஊற்ற பத்தரைமாற்று தங்கமாகும். (பா.எண் 59) இந்த மூலிகை கற்ப மூலிகையாகும். இதனை உண்டால் உடலானது ஆயிரத் தெட்டாண்டுகள் கல் போன்று உறுதியாய் இருக்கும். பொற்குருந்து எனும் மூலிகையினா-லும் சால வித்தையெல்லாம் கைவரப்பெறும்.

92. குருந்து மூலிகையைக் கௌன சித்தர்கள் தேடிக் (பா.எண் 60) கண்டெடுப்பார்கள். அத்தகைய சித்தர்களைப் பார்த்தால் செகச்சால வித்தையைக் கற்றுத் தருவார்கள். அமுதத்தைத் தேவர்கள் வரவழைத்து உனக்கும் கொடுப்பார்கள். குருந்து வேர், இலை, அரிசித்தைப் பொடி செய்து கொள்வார்கள்.

93. இதன் வேர்ப்பொடியைச் சாப்பிட்டால் பாம்பின் விடம் (பா.எண் 61) ஏறாது. இலைப் பொடியைச் சாப்பிட்டால் நோய்கள் ஏதும் இல்லை. பூவின் பொடியைச் சாப்பிட விந்து கட்டும். உடல் பொன்னிறமாகும். காயின் பொடிக்கு உடல் வன்மை பெறும்.

94. குருந்தின் மேற்றோல் பட்டையினைப் பொடித்துக் (பா.எண் 62) அதனாலான தைலத்தில் பெருவியாதி தீரும். ஆறாத வாய் திறந்த புண்ணின் மீது வைக்க அது ஆறி தேகம் வன்மையுறும். இரும்பின் மீது பூச தங்கமாகும் அறுபத்து நான்கு சரக்கும் மெழுகு போல் கட்டும்.

95. மெழுகுகளில் தயிலத்தை விட அனல் முகத்தில் வந்து வாட்டும். தீட்டிவிட செந்தூரமாகும். கல்,
பா.எண் 63 கரழல் தைலத்தைத் தடவி வாட்ட செந்தூரம் பற்பமாக மாறும். முத்து, இரத்தினம், சங்கு இவற்றில் தடவ முத்து பற்பமாகும். இருந்தினைப் பார்த்தவர்க்குத் தங்கமேனிய சங்கநிதி பார்த்தது போலாகும்.

96. கருவீழி அறுபத்து நான்கு சரக்குகளைச் சுத்தி செய்ய பயன்படும். கருவீழிக் கிழங்கினைத் தேடி எடுத்து
பா.எண் 64 சிறு துண்டுகளாக வெட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். அதனைக் குழித் தைலமாய் இறக்கிக் கொண்டு எருமைச் சிறுநீரையும் சேர்த்து வாட்ட ஈ.யம் செம்பாகும். ஆதி இருந்தித் தைலத்தைச் சேர்த்துக் கொள்ளவும்.

97. செம்பிலே இத்தைலத்தைத் தாக்க தங்கமாகும்.
பா.எண் 65 இத்தைலத்தை நோய்களுக்குக் கொடுக்க விஷக்கடி, விஷநீர்கள் விரியன் பாம்பு விடம் தீரும். காசளவு (4.4கி) இத்தைலத்தை 45 நாட்கள் உட்கொள்ள இறப்பில்லை. இந்த வீழித் தைலம் சஞ்சீவிக் கொப்பானது. வீழியின் வேரினை எடுத்துக் கொள்ளவும்.

98. வேரினை கையில் வைத்துக் கொண்டு இருந்தால்
பா.எண் 66 1/2 மணி நேரத்தில் நிறம் மாறும். சாலையால், மருத மரம்

போலிருக்கும். பழங்கள் அதிகமாகத் தொங்கிக் கொண்டிருக்கும். மூன்று மணிநேரம் கழித்துப்பார்க்க எட்டி மரம் போலிருக்கும். ஆறுமணி நேரம் கழித்துப் பார்த்தால் பாலை மரமாகவும் அதற்கும் பிறகு பணைமரமாகவும் இருக்கும் அதன் பின் பனம்பழ பூண்டாக தோன்றும்.

99. மேற்குறிப்பட்ட பூண்டு வகைகளின் பூ, காய், தோல், இலை, வேர் ஆகிய ஐந்தையும் எடுத்துக் கொள்ளவும். இருபத்தைந்து எண்ணிக்கையை எடுத்து வைக்கவும்.

பா.எண் 67

100. பணையின் ஐந்து பொருட்களையும் சாம்பலாக ஆக்கவும். பாலையின் ஐந்தையும் தைலமாய் வடித்துக் கொள்ளவும். எட்டியின் ஐந்தையும் குளிகையாய் செய்து கொள்ளவும். மாவின் ஐந்தையும் ~~[illegible]~~ சூரணமாய்ச் செய்யவும். இவ்வாறே மருந்து முறைகளை வெவ்வேறாய்ச் செய்து கொண்டால் உலகத்தார் உன்னைத் தலையில் வைத்துக் கொண்டு ஆடுவார்கள் அதாவது பாராட்டுவார்கள்.

பா.எண் 68

101. ஆடும் சபையாம் அம்பலத்தில் அறுபத்து நான்கு வித்தைகளும் கைக் கொள்வதற்குப் பணையின் சாம்பலைத் தாவ ஐந்தும் கட்டும். குழம்பினை நெத்துத்திலதமாய் வைத்துக் கொண்ட ஐந்து வகை வடிவம் தோன்றும். பட்டியின் வகைகள் ஐந்தின் வடிவம் தோன்றும்.

பா.எண் 69

102. குளிகையினால் வானத்தில் சென்று மறுபடி பூமியில் வரலாம். ஆற்று வெள்ளத்தில் ஜீரணத்தைத் தாவும் போது பறவை, மிருகம், தும்பி, தேள், குளவி, நட்டுவக்காலி ஆகிய அனைத்தின் பலவகை ஒலிகளெல்லாம் நமக்குக் கேட்கும்.

பா.எண் 70

| எண்60 | அ.எண். 600. திருமூலர் 500. |

103. நோயின்றி நீண்ட நாட்கள் வாழ்வதற்கும் திரை, நரை நீங்குவதற்கும் கெவனம் (ஆகாயத்தில் பறத்தல்) கலந்து எங்கும் சுற்றி அலையவும் தியானம், ஞானம் என சித்துக்கள் ஐந்தாகும்.

பா.எண் 0

104. உடல் வன்மையுறுவதற்குக் கற்பத்தை 508 பாடல்களில் உரைத்துள்ளோம். கற்பத்தைச் சாப்பிட்ட வல்லவர்கள் பஞ்சு போன்ற நரை நீங்கப்பெற்று பத்து கோடி காலம் வாழ்வார்கள்.

பா.எண் 1

105. வாழ்க்கை என்பது பல்லாண்டு காலம் வாழ்வதற்கு மட்டுமல்லாது அட்டமா சித்திக்குமாகும். கற்பத்தினில் நூறு கோடி வேதைகளும் கைவரப்பெறும்.

பா.எண் 2

106. இது கற்பம் ஏதோ வென்று எண்ணிவிடாதீர்கள். மகா சித்துகள் பலவும் கைவரப் பெறும். உலோகங்களை பதினாறு மாற்றுள்ள தங்கமாக ஆக்கும் கலையும் கற்பத்தினால் முடியும்.

பா.எண் 3

107. பதினாறு மாற்று தங்கம் போல உன்றுடைய (பொய்யாக்கும்) உடலும் பொன்னிறமாகும். விதியையும் மாற்ற வல்ல இயல்பு கற்பத்திற்கு உண்டு.

பா.எண் 4

108 சமாதிக்கு முன்னர் உள்ள அங்க வகைகளைக் கேட்பீராக! அசட்டுத்தனமான வழலை, குணம் போக்கும். மலசலங்கள் நீங்கும்.

பா.எண் 5

109. இவை மூன்றும் தீர்ந்த பிறகு புருவங்களின் இடையில் உள்ள ஒளியில் உன் மனதைச் செலுத்துவாய். நாமே தான் சிவம். சிவமென்று தனியே ஒன்றில்லை.

பா.எண் 6

110. இடத்தை இறுக்கிப் பார்க்காதும், அறிவு கெட்டும் மாய்ந்திடாதே. சிவம் நம் எதும் இல்லை யின் எழுத்தைச் சேர்த்துக் கூற யோகமாகும். யோகத் திரியை சரியான வழி நோக்காகும்.

பா.எண் 7

111. மூக்கின் நுனியில் உன் மனத்தை நீ ஒருமைப்
பா-எண் 8 பத்தி செலுத்து. மூக்கின் இடையில் மெய் உள்ளது.
மூக்கின் இடைவழியை விட்டு வேறெங்கும்
போகாது.

112. பேரண்டமானது. உன்னிடம் முன்னின்று பேசும்.
பா-எண் 9 பரத்திலிருக்கும் மோட்சம் கைக்கு கிட்டும்.
மூலிகைக் கற்பத்தினால் சித்தம் கைவரப் பெறும்.

113. மூலிகையினாலான கற்பமும் ஐம்பதும் — பாடாணங்கள்
பா-எண் 10 ஐம்பதும் இரசம், தங்கம் ஆகியவற்றாலான இரண்டா-
-வான கற்பமும் சேர்ந்து ஒரு நூற்று இருபதும் ஆகும்.

114. மேற்கூறிய கற்பங்களைச் சாப்பிடாத மக்கள் பாடாணங்
பா-எண் 11 -களால் செய்யப்பட்ட வேதைகளுக்கு ஏங்குவார்கள்.
நம் உடலில் கற்பமானது தங்கினால் உடல் பொன்
போலாகும்.

115. கற்பத்தில் தோன்றியது பொன், துரிசியிலும், இரசத்
பா-எண் 12 -திலும் தோன்றியது பொன். ~~[illegible]~~ உபரசப் போக்கில்
தோன்றியது பொன்னாகும்.

116. கற்பமானது உடலிற்றங்கி வேலை செய்ய
பா.எண் 13 வழலையும் பித்தமும் நீங்கும்.

117. ஆனி, ஆடி மாதத்தில் அச்சூரணத்தைச் சாப்பிட்டுக்
கொள்ளவும். அறுகண்ணியை, முனிவர்கள்
பா.எண் 14 கூறியது போல முப்பது நாட்கள் சாப்பிடவும்.
பொன்னாங்காணியை ஐப்பசியிலும் சிறுக்கீரையை
கார்த்திகையிலும் சாப்பிட மேனி காய கற்பமாகும்.

118. மார்கழி, தை மாதத்தில் சுக்கைச் சாப்பிடவும்.
பா.எண் 15 மாசி, பங்குனியில் உப்பைச் சாப்பிடவும். சித்திரை
வைகாசியில் தேனைச் சாப்பிடவும். நல்ல அனு-
-பானங்களில் கொள்ள சிறப்பாகும்.

119. அனுபானங்களைத் தக்கவாறு பலவகைகளில் மாற்றி
பா.எண் 16 20 நாட்கள் கொள்ள பழைய கழிவுகள் வெளி-
-யேறும். மாங்காய், வழலை நீங்கும். கற்றாழையைச்
சாப்பிட நன்று.

120. சோற்றுக் கற்றாழையுடன் கள்ளிக்காயைச் சமமாக
பா.எண் 17 எடுத்து சிறுநீரைச் சேர்த்தால் மலம் நீங்கும்.
உடல் பலமாகும். காய கற்பமாகும்.

121. இக்கற்பத்தை 20 நாட்கள் சாப்பிட வேண்டும். அனைத்து மலங்களும் கழிவுகளும் வெளியேறும்.
பா.எண் 18 உடலானது வன்மையுறும். பலம் பெறும். இதையும் மீறி ஆறைக் கொள்ளுங்கள்.

122. நரை மிளகைக் கற்பமாக உட்கொள்ள காய சித்தியாகும். இக் காய கற்பத்தை முறையாக உட்கொள்ள நரை முடி மாறி வேறு மயிர் முளைக்கும்.
பா.எண் 19

123. இக்கற்பத்தை 40 நாட்கள் தொடர்ந்து விடாமல் சாப்பிட உடல் காய கற்பமாகும். கருமையான கரிசாலையைச் சாப்பிட காய கற்பமாகும்.
பா.எண் 20

124. கரிசாலை என்னும் மூலிகையைச் சாப்பிட உடலிலுள்ள பல வியாதிகள், திரை நீங்கும். நரை நீங்கும். உடல் இளமையாகும். வன்மை பெறும். உடலில் முதுமை ஏற்படாது. எப்போதும் இளமையுடனும் வளமையுடனும் இருக்கும்.
பா.எண் 21

125. கருநெல்லி, பொற்றலைக்கையாந்தகரை, வல்லாரை ஆகிய ஐந்தையும் சமமாக சேர்த்து பொடி செய்து கொள்ளவும். அதனைப் பாலில் கலந்து உட்கொள்ள உடலானது ஆயிரம் ஆண்டுகள் அழியாது.
பா.எண் 22

126. ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதற்கு இக்கற்ப மூலிகைகளைச்
பா.எண் சாப்பிட்டு 40 நாட்கள் பெண்ணைத் தொடாமல்
23 இருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் சாப்பிட்டது
பலனற்றுப் போகும். ஐம்பொறிகள் ஆ பலமாகும்.

127. சங்கோலத்தின் இலை, தக்கோலம், சாதிக்காய்
செங்கோல விதை வன்னி, பொற்கொன்றை, சிங்கோல
பா.எண் வேர், தக்கோல வேர், ஆகியவற்றைச் சேர்த்து உட்கொள்ள உடல்
24 அழகு பெறும்.

128. மேற்சொன்ன கற்பங்களைச் சாப்பிட்டு ஏழாந்தரமான
கற்பத்தைக் கீழ்வருமாறு: திலகம், சூதம், அப்பிரகம்,
பா.எண் ஆகிய அவற்றைச் சேர்த்து உருக்கி புடமிட்டு செந்தூரமாய்ச்
25 செந்தூரித்துக் கொள்ளவும். அதில் 488மி.கி அளவு
நாள்தோறும் உட்கொள்ளவும்.

129. அவ்வாறு சாப்பிட உடலானது சிறுகதிர் போன்று
பா.எண் இளமையாகவும் வளமையாகவும் இருக்கும். உடல்
26 காயகற்பமாகும். இறந்துள்ள மனோன்மணியையும்
பார்க்கலாம்.

130. எட்டாந்தரமான கற்பத்தைக் கூறுகிறேன்:
பா.எண் கெந்தகம், தாளகம், திலகம், சூதம் ஆகியவற்றை உருக்கி
27 அனைத்தையும் சேர்த்து புடத்தில் வைத்து செந்தூர
-மாக்கவும்.

131. அச்செந்தூரத்தை நாள்தோறும் 488 மி.கி எடுத்து உட்கொள்ள உடலிலுள்ள களங்கம் நீங்கி
பா.எண் 28 உடல் பொன்னிறமாகும். எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். எங்கு வேண்டுமானாலும் தங்கலாம். உடல் வன்மையுறும். நரைமயிர் நீலமாகும்.

131. நீலக்கோதிக்கல்லையும் கெந்தகத்தையும் சமமாக எடுத்துக் கொள்ளவும். வங்கத்தையும் இரசத்தையும்
பா.எண் 29 அவ்வெடையே எடுத்து அவுரிச் சாற்றில் குழைத்து சாப்பிட இளைஞனாவான், இளமையோடிருப்பான்.

132. யானையின் லத்தியைப் பாத்திரத்தில் போட்டுக் கொள்ளவும். 40 நாட்கள் அவ்வாறே வைத்திருக்கவும்.
பா.எண் 30 பிறகெடுத்து அரைத்துக் கொள்ளவும். இரசத்தை உருக்கிக் கொள்ளவும்.

133. உருக்கி அதனுடன் சாரணையைச் சேர்த்துக் கொள்ளவும். பாலையும் சேர்த்துக் கொள்ளவும். கவனம் அதிகமாகும்.
பா.எண் 31 நரை அற்றும். சித்தர்கள் இவ்வாறிருப்பர்.

134. மேற்குறிப்பிட்டவாறு பல்வேறு கற்பங்களைச் சாப்பிட்டு தேகத்தைக் கல் போன்று காய கற்பமாய் வைத்திருப்பர்.
பா.எண் 32 சித்தர்கள் இவ்வாறு செய்து சித்துகளைக் கையாண்டு பத்தியம் பாலனை புரிந்தர்.

135. பால், வெல்லம், பயிறு, அரிசி, நெய், நான்கு வகையான
பா.எண் 33 இனிப்புமிக்க பழம், கனி, தேன், பணியாரம் மிளகு,
பொன்னாங்காணி ஆகியவற்றைப் பத்தியப் பொருட்கள்
என்று சித்தர்கள் கூறியுள்ளனர்.

136. புளி, உப்பு, நாட்டிறைச்சி கரும்பு சுண்ணாம்பு,
பா.எண் 34 எண்ணெய் கடுகு, உள்ளி, ஆகியவை யோகம்
கை வரப் பெறும் சித்தர்களுக்கு ஆகாது.

137. யோகிகள் முழுக்கு:- யோகிகள் நெய், பால், வெந்நீர்.
பா.எண் 35 ஆகியவற்றைத் தேய்த்து வெந்நீரில் முழுகுவர்.

138. அழகும் உறுதியும் பெற வேண்டி யோகிகள் தாங்கள்
குளிக்க வைத்துள்ள வெந்நீரில் மிளகு,
பா.எண் 36 மஞ்சள், கடுநெல்லி, வேம்பு ஆகியவற்றை வகைக்கு
ஒரு பிடி போட்டு குளிப்பர். அப்போது உடல்
உறுதி பெறும். கபாலம் இறுகி கெட்டிப்படும்.

139. கபாலம் கெட்டிப்பட்டு கண்ணும் ஒளிபெறும்.
உடலில் இருக்கும் அபானன், உதானன், கிருகரன்
பா.எண் 37 கூர்மன், சமானன், தனஞ்சயன், தேவதத்தன், நாகன்
பிராணன் வியானன், ஆகிய பத்து வகை வாயுக்கள்
தன்னிலையினின்று திரியாது. துன்பத்தையும் கொடுக்காது.

140. கற்பத்தைச் சாப்பிட்ட சித்தர்களுக்கு இறப்பில்லை.
பா.எண் 38 மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வார்கள்.
பூரணத்தை, முழுமையைக் கண்ட இவர்களுக்கு
அழிவில்லை. கற்பத்தை உண்ணும் இவர்கள் இறவார்.

141. மூலிகை கற்பம்:- மூலிகை கற்பம் கீழ்வருமாறு.
பா.எண் 39 ஒரு குழியை வெட்டி அதில் நல்ல மண்ணைப்
பரப்பிக் கொள்ளவும். செங்கொட்டையை அதில்
வைத்து இரு புறமும் கரிசாலையை வைக்கவும்.

142. மூலிகையின் மீது மறுபடி மண்ணைப் பரப்பி அங்கங்கு
பா.எண் 40 வெட்டி வைத்து அரைப் பகுதியில் தண்ணீர் விடவும்.
கொட்டைகளுடன் நன்கு சேர்ந்து விடும். மறு அரைப்
பங்கிலும் அவ்வாறே செய்யவும்.

143. செங்கொட்டை விதைகளைப் போட்டு கொத்தி விடவும்.
பிறகு பரப்பி விடவும். மறுபடி செங்கொட்டை விதை
பா.எண் 41 களை அதன் மீது தெளித்து தண்ணீரை ஊற்றுக.
இவ்வாறே பயிராக்கிக் கொள்ளவும். இவ்வாறே மூன்று
முறை செய்யவும்.

144. மூன்றாம் முறையும் இவ்வாறு செய்யும் போது முழுதும்
பா.எண் 42 கறுப்பாகும். சித்தர்கள் அவ்வவ்விடத்தில் இவ்வாறே
செய்வர்: செடியெல்லாம் வெளுப்பாகாது கறுப்பாகும்.

எண் 82 சு.எ. 341. அனுபவ வைத்தியம் பல திரட்டு.

145. தன்னைத் தான் காத்துக் கொள்வதற்கு உதவும்

அமிர்தரச கற்பம் — அமிர்தரசகற்பம் செய்யும் முறை கீழ்வருமாறு. காரத்தையும் சாரத்தையும் சேர்த்துக் கொள்ளவும் அதுற்றுடன் இரவிநாத முப்புவையும் சேர்க்கவும். பூரணத்தையும் அமைவாய் சேர்த்து கரைத்து வடிகட்டிக் கொள்ளவும். வெயிலில் அதனை வைத்து நன்றாகக் உலர விட்டால் மெழுகாய் விடும்.

146. மெழுகினை மேலும் நன்றாக காய வைத்துக் கொள்ளவும். வெயிலில் ஒன்பது நாள் உலர வைத்து பத்தாம் நாள் எடுத்துப் பார்க்க அமிர்த போதம் கிடைக்கும். அது கற்பமாகும். பக்தியுடன் இதனைக் காலை மாலை உட்கொள்ளவும்.

147. அவ்வாறு கொள்ள உடம்பிலுள்ள நோய்கள் விரைவில் குணமாகும். மந்திரம் யாவும் சித்தியாகும். மனம் ஒருமைப்பட்டு அறிவு பெருகும். அறிவானது கற்பூர தீபம் போல் ஒளிவிடும். மாறும் முறைகளை அறிந்து மூச்சுப் பயிற்சியை மேற்கொண்டால் மந்திரம் → பஞ்சாட்சரத்தின் ஒளியைக் காணலாம்.

148. அனுக்கிரக வீடு பார்க்க கற்பம் :- நெருப்பு தான் முதல் தெய்வம். நெருப்பானது அணைந்து போயிற்றென்றால் நிலம், நீர், வாயு ஆகியவை தன்னிலை மறந்து வெளியிலே ஏகும். அவ்வாறு இவை இன்றும் நிலை

மறந்து வெளியே போகாதவாறு அந்நெருப்பைச் சோதியாக நினைத்து நாள்தோறும் வழிபட்டு தெளிவடைவாயாக.

149. அவ்வாறு வழியினை அறிந்து தெளிந்து அமிர்தத்தை உட்கொண்டால் மூச்சானது நேரே நின்று நெற்றியின் மத்தியிலே சென்றடையும். எங்கும் நில்லாது சென்று உயரத்தில் நிற்க ~~சென்று~~ ஒளியானது தானே தோன்றும். அதனைப் பக்தியுடன் எண்ணிப் பார்க்கவும்.

150. ஒன்பது கிரகங்களுக்குள் அனுக்கிரகமும் நன்மை பயப்பதுவுமான பத்தாம் வீட்டில் சோதி தோன்றும். அந்த சோதியை மனத்தளவில் பார்த்துக் கொள்ளவும். புருவத்தின் மையத்தைப் பார்ப்பதற்கான கற்பமொன்றுண்டு, அது கீழ்வருமாறு.

151. மாதுரதி அமிர்தத்தை வாங்கி ஒரு கரகத்தில் போட்டு கணக்காக மிளகளவு எடுத்துக் கொள்ளவும், அதனைத் தேனில் ஊற வைத்துக் கொள்ளவும். ~~[illegible]~~ திரவம் நன்றாக வற்றுமளவுக்கு ஊறிவிட்டதனில் காலை, மாலை ஐந்தை உட்கொள்ளவும்.

152. அவ்வாறு கொள்ள கோழை நீங்கும். மூச்சானது நெறிமுறைப்படி இருக்கும். புருவமத்தியில் ஒளி காணும். சோர்வான தத்துவங்கள் நீங்கி தூய்மையாகும். அமிர்த ரசம் உட்கொண்டதால் மந்திரத்தின் பயனால் சக்கரம் நின்று பலன் கொடுக்கும்.

153. என்னி—மின்ன கண்ணினை அறிந்து விண்ணினைப் பார்க்க எங்கும் தன்மயமாய் இருப்பதை அறிந்து கொண்டேன். காண்பதெல்லாம் கண் தான். வாழ்ந்-தனவையும் தாழ்ந்தனவையும் அனைத்தும் கண்ணே. சாத்திரமும் சிவனிலையும் விண்ணும் அனைத்தும் கண்ணேயாகும். கண் இல்லையெனில் எதுவும் இல்லை.

154. <u>கண் ஞானம் திறப்பு கட்டு விபரம்</u>

உப்பினைக் கட்டும் முறை கீழ் வருமாறு. உப்பையும் இலிங்கத்தையும் சேர்த்து அதனுடன் நான்கிலொரு பாகம் காரத்தையும் சேர்த்து நாதநீர் ஊற்றி அரைத்துக் கொள்ளவும். அரைத்ததை உருட்டி உருண்டைகளாகச் செய்து வட்டிலிட்டு ~~கொள்ளவும்~~. புடம் போட்டு உருண்டைகளை வைக்க இலிங்கமானது கட்டும்.

155. கட்டிய இலிங்கத்தை வெள்ளி, செம்புக்கு பத்துக்கு ஒன்றாகக் கொடுத்து உருக்கிப் பார்க்க அவை பொன்னாகும். அந்தப் பொன்னின் ஒளியான் அழகை சொல்ல இயலாது. கண்ணொளி போன்ற அவ்வொளியைக் காண கண் காட்சி அதிகமாகும். அக்காட்சியாலே சிவயோகம் கிடைக்கும்.

156. <u>அமிர்தரச கற்பம்</u> :- பூரணத்தை அறிந்து வெளியே செல்ல கற்பமொன்று உரைக்கிறேன். அது கீழ் வருமாறு. தவப் பேற்றினால் பயன்மிக்க சக்தி சிவ பூஜையைச் செய்து இரக்கத்தினால் இதயத்தில் சென்று பூரணத்தைப் பெற்றுக் கொள்வாய்.

157. பூரணத்துடன் ரவிநாதம், பூரத்தைச் சேர்த்து வெயிலில் ஒன்பது நாட்கள் வைக்கவும். நன்றாகக் காய்ந்ததும் அதனைப் பாத்திரத்தில் போட்டு குழித்தைலமாய் முறைப்படி இறக்கிக் கொள்ளவும். அமிர்தரச வெண்ணெயை தைலத்துடன் சேர்த்துக் கொள்ளவும்.

158. நன்கு கலந்து ஒன்றோடு ஒன்று சேர்ந்த பிறகு பீங்கானில் வைத்து பத்திரப்படுத்திக் கொள்ளவும். சற்குருவை வணங்கி அதில் 48 மி.கி எடுத்து உட்கொள்ள தேகம் தளர்ந்து போகாது இளமை-யாயிருக்கும். மூச்சானது ஒரு சீராய் இருக்கும். புருவமையத்தின் இடையிலுள்ள ஒளி தெரியும்.

159. ஓங்கார ரீங்கார ஞானம்:-
அமிர்தரச கற்பத்தை 40 நாட்கள் உட்கொள்ள மனத்திலே காட்சி தோன்றி புத்தியுடன் சித்தியும் தெரியும். வாசி எனும் மூச்சு நெறிமுறையாய் இருக்கும். சோதி தோன்றும். அதனாலே மகிழ்ச்சி கிடைக்கும். பூரணத்தினால் பேரொளியில் அண்டரண்டத்தைக் காணலாம்.

160. அண்டரண்டத்தில் உச்சியில் இருக்கிற வட்டத்தில் விந்து வாகிய மேரு காணும். அத்தகு மேருவிலே ஓங்காரக் கம்பத்தை நாட்டிக் கொள்ளவும். அங்குள்ள ரீங்காரத்தில் அவ்வழியே செல்ல கோமப்பால் கிடைக்கும். அதனை நாள்தோறும் கொள்ளவும்.

161. நாள்தோறும் அதனைப் பார்க்க உண்மையாயுள்ள மேலத்தில் அனலானது அதிகமாகி அண்டர்பகத்தில் முக்கோணத்தில் அனலானது சோதியாகி அடங்கி இருக்கும். எட்டு திசைக்கும் மேலாகி இருக்கும் அந்தப் புருவத்தினிடையில் இருக்கும் ஒளியானது கற்பூரதீபம் போன்று ஒளிர்ந்து இருக்கும். அதனை அறிந்து கொள்வாயாக.

162. ஞானம், நெற்றி முத்தி மெய்ஞான பூரண வேகிய கற்பம்

நிலையாக நிறம்பட வாழ்வதற்குக் கற்பமொன்று கீழ்வருமாறு 'காயம் என்று அழைக்கப்படும் பெருங்காயத்தை பக்தியுடன் எடுத்துக் கொள்ளவும். அதைப் பாகம் செய்து கொள்ளவும். காரம், பூரத்தை அதனுடன் சேர்க்கவும்.

163. மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து பாத்திரத்தில் போட்டு மூடிக் கொள்ளவும். அதனைச் சமாதியில் போட்டு வைத்துக் கொள்ளவும். 40 நாட்கள் அப்படியே வைத்திருந்து எடுத்துப் பார்க்கவும். அதிலுள்ள தண்ணீர் வற்றி மெழுகாய் ஆகும். அதனையெடுத்து கல்வத்தில் போட்டு அரைத்துக் கொள்ளவும்.

164. அரைத்த அதனைப் பாத்திரத்தில் போட்டு கற்பூரப் பொடியை மேலே தூவிக் கொள்ளவும். பாத்திரத்தின் வாயை மூடி வைத்து விடவும். தயிலமாய் ஆகி இருக்கும். அதனை மெழுகினை சேர்த்துக் கொள்ளவும்.

164. பீங்கானில் சேர்த்த மருந்தை அடைத்து வைக்கவும். நன்றாக மூடி பத்திரப்படுத்தி சற்குருவைத் தியானித்துக் கொள்ளவும்.

165. பூரணத்தைத் தெய்வமாக நினைத்துத் தியானம் செய்து கொள்ளவும். உண்மையாய் இருந்து மேற்கூறப்பட்ட பூரண லேகியத்தை 488 மி.கி எடுத்து மூலநந்திக்கு அறிவித்து காலை, மாலை உட்கொள்ளவும்.

166. வாழ்க்கையினின்றும் ஈடேறுவதற்கான வழியைத் தெரிந்து கொண்டு தெளிவான மனதுடன் யோக மார்க்கத்தையும் கைக்கொண்டு பூரணத்தைத் தெளிவான மனதுடன் ஏற்றுக் கொள்ளும் போது மூச்சானது நெறிமுறையுடன் இருதயத்திற்குச் செல்லும். சரியான இடத்தில் மூச்சானது இருந்ததென்றால் உடலானது வன்மையுறும். காயகற்பமாகும்.

க.ஓ **எண். 154** சு. எண் :. உரோமரிஷி பாடல்:

167. மற்றுமொரு கற்பமான கடுக்காய் கற்பம் கூறுகிறேன். கீழ்வருமாறு. செங்கடுக்காயை எடுத்துச் சிறுநீரில் ஊற வைத்துக் கொள்ளவும். அப்போது கடுக்காய் சுத்தியாகும். அதனை எடுத்துப் பொடித்துக் கலசத்தில் அடைத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும். அதிலிருந்து மூவிரலளவு சூரணத்தை வெந்நீரில் கலந்து உட்கொள்ளவும். அவ்வாறே 40 நாட்கள் தொடர்ந்து செய்யவும்.

பா.எண 304

பா.எண் 305

168. மிளகில் பெரிதாகப் பார்த்து எடுத்து கோமியத்தில் ஊற வைத்துக் கொள்ளவும். ஊறிய பிறகு ஐந்தைந்தாக எடுத்து வைக்கவும். நாள்தோறும் ஐந்து வீதம் இருபது நாட்கள் நாலு மிளகு வரை தொடர்ந்து சாப்பிடவும்.

பா.எண் 306

169. மிளகைச் சாப்பிடும் போது சிறுநீருடன் சேர்த்து சாப்பிடவும். சிறுநீரில் தேற்றானின் விதையை உரைத்துக் கொள்ளவும். சுகி உப்புச்சுண்ணத்தையும் சேர்க்கவும். அப்போது தெளிந்து போகும். கர்ப்பத்துக்காகும்.

பா.எண் 307

170. இவ்வாறு தொடர்ந்து காலை நேரத்தில் செய்து கொண்டு வரவும். மாலையிலே சூரணத்தைச் சாப்பிட-வும். அதற்குண்டான பக்குவம் கீழ்வருமாறு. கரிசாலை, குப்பைமேனி, செருப்படி, விடத்தலை ஆகியவற்றின் வேர்கள், பொற்கொன்றை, கரந்தை, தூதுவளை, அவுரி,

பா.எண் 308

171. வல்லாரை, அங்கோலவித்து, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, வாலுளுவை விதை, மந்தாரை, வெள்ளைப்பூ மல்லிகை, நிலப்பனங்கிழங்கு, ஆகியவற்றை வகைக்கு 35கி எடுத்துச் சூரணமாய்ச் செய்து கொள்ளவும். அவ்வெ-டையில் எட்டிலொருபாகம் கற்கண்டைச் சேர்த்துக் கொள்ளவும்.

172. அச்சூரணத்தில் மூவிரலளவு எடுத்து அதில் முள்ளம்பன்றியின்
பா.எண் 309 நெய்யை ஊற்றி அரைத்துக் கொள்ளவும். ~~அதனை~~
அவ்வாறே 40 நாட்கள் மாலையில் மட்டும் உட்
கொள்ளவும். காலையில் மேற்சொன்ன மௌனக்
கற்பத்தை உட்கொள்ள பக்குவ முறையைக் கூறினேன்.
அவ்வாறு செய்ய உடலிலுள்ள கெட்ட நீர்
வெளியேறி விடும்.

173. வாதம், பித்தம் இவை உடலில் அதிகமாக இருப்பின்
பா.எண் 310 வெளியேறும். தலையிலுள்ள கபமானது நீங்கும்.
கோழை வெளியேறும். தீயவை வெளியேறி அமிர்தமாய்
பெருகும். ஊற்றெடுக்கும். நரம்புகள் முறுக்கேறி வன்மை
பெறும். விந்துவானது தளராது திரட்சியாகி மணி போன்று கட்டி
-யாகும். இது போன்ற கற்பத்தைக் கொள்ளாது
மாயத்தில் சிக்கிக் கொள்ளக் கூடாது.

174. மாயவலையில் சிக்காது ஒரு பக்கமாக நின்று
பா.எண் 311 நாள்தோறும் மூச்சின் நெறிமுறையைப் பார்க்கவும்.
தீயவை போகும் வழியை இந்நூலில் கூறியுள்ளேன்.
இதனை உலகத்தோர் பார்க்காது அழிந்தார்கள்.
மனதை ஒருமுகத்துடன் வைத்து எங்கும் சிதைய
விடாது இருப்பவர் சித்தர்களானார்.

பா.எண் 312 175. உரோமரிஷியின் மகனென்று நீ கூறி வந்தாயென்றால் உனக்குமட்டுமின்றி எனக்கும் புகழுண்டு. சித்தருடைய தனைப் பார்த்து வறுமையை நீக்கிக் கொள்ளலாம். திரவங்கும் எவ்வித தொழில்களுக்கும் குருவுமாகி விளங்குவது எந்நாளுமேயாகும்.

பா.எண் 313 176. சிந்தில் கற்பம்: உருத்திரன் கற்பம் செய்யும் முறை கீழ்வருமாறு. வலிமையான சிந்திலைப் பெரிதாகப் பார்த்து எடுத்துக் கொள்ளவும். அதன் வேரை முழுமையாக எடுப்பதற்கு ஓர் ஆள் உயரம் தோண்டிப் பார்க்க நீளமான கிழங்கு தோன்றும். மூச்சை உள்ளே இருத்து வாலையைத் தியானம் செய்துகொள்ளவும்.

பா.எண் 314 177. என்னுடைய அன்னையின் கருணையினால் கிழங்கினைத் தோண்டி எடுத்து மேல்தோலைச் சீவிக் கொள்ளவும். பிறகு அதனைப் பாக்கு போல துண்டு துண்டாய் வெட்டி நிழலில் காய வைத்து இடித்து முறைப்படி சூரணமாய்ச் செய்து கொள்ளவும். சூரணத்தின் எடையில் எட்டிலொரு பாகம் சர்க்கரையைச் சேர்க்கவும். இரண்டையும் நன்கு கலந்து வைக்கவும்.

பா.எண் 315 178. இச்சூரணத்தைக் காலை, மாலை இரண்டு நேரமும் சாப்பிடவும். சிந்தில் தண்டின் மேல்தோலைப் பாலை எடுத்து விடவும். பின் அத்தோலை நன்கு

இடித்து 35கி அளவுக்கு 1.3லி அளவு தண்ணீரை ஊற்றி நன்கு கலந்து கொள்ளவும். மனதில் தியானம் செய்து தண்ணீர் ஊற்றிய பாத்திரத்தை அடுப்பில் வைத்து முறைப்படி காய்ச்சி எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் கொள்ளவும்.

179. இக்குடிநீரைச் சிந்தில் சூரணத்தோடு சேர்த்து காலை, மாலை உட்கொள்ளவும். அவ்வாறே 40 நாட்கள் குடிக்க நரை, திரை நீங்கும். காய சித்திக்கு இது நல்ல மருந்தாகும். இதனைத் தொடர்ந்து கொள்ள இறப்பில்லை - தளர்ச்சி வராது. இறைவியின் கருணையினால் அருள், பொருள் அதிகமாகுமே.

பா.எண் 316

180. சிந்திவுக்கு இறப்பில்லை. மறைபொருளாகச் சொல்லி வைத்தார். துன்பம் நீங்கி வாழவேண்டுமென்று இவ்வகைக் கற்பத்தைக் கூறியுள்ளார்கள். மேலானது கட்டினால் அது தீருவதற்கான கற்ப முறை கீழ்வருமாறு. சதுரக் கள்ளிக்காயை எடுத்துக் கொள்ளவும்.

பா.எண் 317

181. 35கி சதுரக்கள்ளிக்காய், கற்றாழைச் சோறு 105கி, தாளைப் போன்ற கடுக்காய் 35கி எடுத்துக் கொள்ளவும். காயிலுள்ள விதையை நீக்கிப் பொடித்து நன்றாகக் கையினால் பிசைந்து கொள்ளவும். அப்போது அதினின்று வரும் தண்ணீரை எடுத்து அதனுடன் 10கி ஆமணக்கெண்ணெயைச் சேர்க்கவும்.

பா.எண் 318

182. சேர்த்த அக்கலவையை உட்கொள்ள கட்டியாய்
இருந்த மலங்கள் வெளியேறும். வழுவைகள் அனைத்தும்
பா.எண் 319 வெளியேறும். பால் கஞ்சியை வைத்து சாப்பிட பித்தம்
அனைத்தும் வெளியேறும்! இக்கற்பத்தினால்
குற்றங்கள் ஏதும் வராது. மலங்களை வெளியேற்றும்
வழி முறையைத் தான் கூறினேன். தீமை என்றும்
பழி இழியில் ஆழாதிருக்கவும் பராபரத்தை அறிந்து
கொள்வதற்குமான கற்பம் கீழ் வருமாறு.

183. சட்டநாதர் பாடிய கற்பவிதியானது சிறப்பானது.
கற்ப விதியையும் அதற்கான வழிமுறைகளையும்
பா.எண் 320 கூறியுள்ளார். சிலர் பலவாறாக கற்ப முறைகளைக்
கூறினார்கள். ஆனால் என்னைப் போல எவரும்
சொல்ல மாட்டார்கள். இது போன்ற கற்பமுறைகளையும்
யாரும் பார்த்து சொல்லமாட்டார்கள். எனவே கருத்துடன்
இப்புத்தகத்தைப் படித்துக் கொள்ளவும்.

184. பத்தியங்களாக நான் கூறுவதை கீழ் வருமாறு.
பா.எண் 321 புளி, புகை, எண்ணெய், உப்பு, பெண், சுண்ணாம்பு
ஆகியவை ஆகாது. மிளகு, கடுகு, உள்ளி, ஆகாது!
நித்திரை, சோம்பல், தவிர்க்க.

கற்ப மருந்து உண்ணும்போது நெறிமுறைகள் :-

185. மனதை வேறெங்கும் செலுத்தாது ஒரு நிலைப்படுத்தி
பா.எண் 322 ஒருமுகப்படுத்த வேண்டும். மவுனத்தைக் கடைபிடிக்க வேண்டும். ஞான வித்தைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். தீவினையான பாதகச் செயல்களை நீக்க வேண்டும்.

186. கற்ப மருந்து சாப்பிடும் போது கடைபிடிக்க
பா.எண் 323 வேண்டிய பத்திய முறைகள் கூறுகிறேன்: கீழ்வருமாறு. பசுநெய், பால், தேன், சிறு பயறு, முருங்கைக்காய் வெள்ளை என்று கூறப்படுகின்ற நாணியான வழுதலங்காய், தூதுவளை இலை, காய், அவரைக்காய், நெல்லிக்காய். ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளவும்.

187. பீர்க்கங்காய், பொன்னாங்காணி, சிறுகீரை கந்தா,
பா.எண் 324 வெள்ளாடு, காடை வல்லாரை, முயல், மான், மரை பனை வெல்லம் ஆகிய உணவுப் பொருட்களையும் கற்ப காலத்துக்கு ஏற்றவையாகக் கருதலாம். இதனை நான் உங்களுக்குக் கூறுகிறேன். கேட்டுக் கொள்வீராக.

188. பத்தியத்திற்கான உணவு வகைகள் கீழ்வருமாறு.
பா.எண் 325 கருங்குறுவை நெல்லினைக் குத்தி அரிசியாகச் செய்து அதில் ~~உமியை~~ உமி இல்லாமல் தீட்டி ஒருகையளவு எடுத்து சமைத்து ஒரு வேளை சாப்பிடவும். பராபரத்தைப் பூசை செய்து ஒரு வேளை வெந்நீரைக் குடிக்கவும்.

189. பழம், சர்க்கரை கொள்ளத்தக்கவை. இவ்வாறு பத்தியத்தில் வேண்டாம் என்று கூறியவற்றைத் தள்ளி, வேண்டுமென்பதைக் கொள்ள வேண்டும். வாலையைத் தினந்தோறும் பூசை செய்யவும். ஞானமாகிய அமிர்தத்தை ஆகாயப் பர வெளியில் நின்று பெற்றுக் கொள்ளவும். உலக வாழ்க்கையை விட்டு விலகி நின்று சச்சிதானந்தத்தில் திளைத்திருப்பாயாக!

பா. எண் 326

190. தன்னிலையைத் தான் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். எப்போதும் குருவின் பதத்தை நினைத்து அதில் சேர்ந்திருக்க வேண்டும். உன் மனதை அறிந்து கொள்ள வேண்டும். இரசகுளிகையின் உதவியால் ஆகாய மார்க்கத்தில் பறக்கும் வித்தையை அறிந்து கொள்ள வேண்டும். தன்னிலையை அறிவதற்கு ஆண்டவரின் அருள் வேண்டும். கோபத்தை அறவே விட்டு விட்டு கற்பத்தை அறிந்து சாப்பிட வேண்டும்.

பா. எண் 327

191. <u>மலக்கட்டுக்கு அவிழ்தம்</u>

பா. எண் 328

கற்ப (மூலிகை) மருந்தைச் சாப்பிடும் நாட்களில் வெப்பம் அதிகமானால் நாள் தோறும் மூதண்டக் குடிநீரைக் குடிக்கவும். அறுகம் வேர் ஒரு பிடியையும் இருபத்தைந்து மிளகையும் சேர்த்து 1-3 லி தண்ணீரில் போட்டுக் கொள்ளவும். அடுப்பில் வைத்து காய்ச்சி 165 மி.லி யாகச் சுண்டக்காய்ச்சி அதில் வெண்ணெயைச் சேர்த்து உட்கொள்ளவும்.

கற்பந்தேய்த்து முழுக விவரம்

192. உ.அகி வெண்ணெயைக் குழநீரில் போட்டுக்
பா.எண் குடிக்க உடலிலுள்ள வெப்பமனைத்தும் நீங்கும்.
329 தலை முழுகுவதற்கான வழி முறை கீழ்வருமாறு.
மிளகு, கடுக்காய், நெல்லி, சாதிக்காய், இஞ்சி, வேம்பு
பருப்பு, மஞ்சள் ஆகிய சரக்குகளைச் சேர்த்து
பசும்பால் ஊற்றி அரைத்து நன்கு காய்ச்சிக்கொள்ளவும்.
அதைத் தலையில் தேய்த்து முழுகவும்.

193. இந்நெய்யைத் தேய்த்து முழுகும் போது பெண் போகத்தை
அறவே நீக்க வேண்டும். மாயமானவற்றை நீக்கவும்.
பா.எண் மாய வலையில் சிக்கி உழன்றாயானால் தீவினை
330 உன்னை அடையும். எனவே மாயத்தை நீக்கு. மனதைத்
தூய்மைப் படுத்துவாயாக. கர்மவினையும் நீங்கும். தெரிந்து
கொள்வாயாக!

194. மேற்குறிப்பிட்டவாறு கற்பங்களை உண்டு காய சித்தி
-யை மனதில் நிலை நிறுத்தி மனத்தைத் தூய்மைபடுத்தி
பா.எண் தெளிவாக்கினால் உட்கொண்ட கற்பங்கள் நிலைபெறும்
331 ஒரு வருடம் ஒரு நாள் போல் உனக்குத் தோன்றும்
அதாவது காலம் குறுகி நிற்கும். முன்பு செய்த
பழவினைகள், தீவினைகள் தீரும். பரமாத்மாவின்
திருவின் பாதத்தைக் காணலாம். சாயுச்சிய பதவியாகிய
கடவுளுடன் ஒன்றுபட்டிருத்தலில் வெற்றி பெறலாம்.

எண். 153. | சு. எண். 594. தன்வந்திரி காவியம் 800

195. பிரம்ம சாதியின் பெற்றதை (நாகம்) இடியாய்க் கட்டிக்
பிரம்ம கற்பம் கொள்ளவும். சுத்தமான தண்ணீரைப் பாத்திரத்தில்
ஊற்றவும். இடியின் மேலே அண்ட அண்ணத்தைப் பூசவும்.
பா.எண் 215 பிறகு அல்லது அள்ளியினால் இடியைக் கட்டிக் கொள்ளவும்.
ஆட்டினாலான மூடி கொண்டு கவிழ்த்து மூடவும்.
அடுப்பின் மேல் அதனை வைத்து தீ மூட்டவும். ஐந்து
மணிநேரம் கழித்து இறக்கிப் பார்க்கவும்.

196. ஆறிய பின் எடுத்துப் பார்க்க முப்பு கிடைக்கும். அதனை
எப்படி வியந்து உரைவது.
பா.எண் 216 திரி மூன்று முக்கோண சக்தியுடைய பூரணாதி முப்புவை
எடுத்து வெட்பாலையினால் செய்யப்பட்ட சிமிழில்
அடைத்து வைக்கவும். அதனைப் பூசையில் வைத்து
நைவேத்தியம் செய்து தேவியை வணங்கிக் கொள்ளவும்.

197. அம்மையை வணங்கிய பிறகு தேவி கருணையை
நமக்குக் காட்டி தீய வினைகளை அகற்றிவிடுவாள்.
பா.எண் 217 அன்பினையே விவேகமாகக் கொண்டு அர்ச்சினையைச்
செய்வாயாக. அவ்வாறே ஒழுக்கமுறையுடன் நீ நடந்தா
-யென்றால் மூச்சுப்பயிற்சி நெறிமுறைப்பட்டு அதனாலுண்
டான மகிமையை நீ காண்பாய். ஆறாதாரம், மூலாதாரத்தின்
மகிமையை அரை நொடியில் பெற்று மகிழ்வாய்.

198. பாறைகளின் மீதும் மலைகளின் மீதும் ஏறி இறைவனைக் கண்டு சிவ பதத்தைக் கண்டடைந்து சிவனைப் போற்றி அர்ச்சனை செய்து மனத்தால் நீ அவனை அறிந்து கொள்வாயாக. அப்போது நீறு, நெருப்பு, புகை அனைத்துமின்றி நிறைவாயும் குற்றமில்லாததுமான மோட்ச-மாய் நின்ற பொருளைப் பார்த்து சிவ பதத்தில் நீ தொடர்ந்து நின்றாயென்றால் கயிலைவழியுள்ள சித்தனாக நீ ஆவாய்.

பா.எண் 218

199. நான் கூறியுள்ள இந்நூல் காவியமாகும். பெருமை மகிமை அனைத்தும் இதில் எடுத்துப்பட்டுள்ளது. சிவன் சக்தி இருவரும் சந்தோசப்பட்டு என்னைப் போற்றிப் பாராட்டினார்கள். சிவசக்தி நாத விந்தின் வர்க்கத்தைக் கூறுகிறேன்! கேட்பீராக! ரவி விந்துமதி நாதத்தின் செயலையும் உரைக்கிறேன்! கேட்பீராக!

பா.எண் 219

200. நந்தீசர் சொன்ன கற்பம்

என் குருவாகிய நந்தீசர் சொன்ன கற்பம் கீழ்வருமாறு. பிரகாசமாயுள்ள இலிங்கமானது ~~மிக~~ சிகப்பாயுள்ளது. செம்மையென்று கூறினால் அது செந்தகமாகும்.

பா.எண் 300

திருவாட்சி மலர் போன்று இளமையாய் உள்ள கன்னியாய் இருக்கலாம்.

201. <u>வாய்வு கற்பம்</u>

மூச்சானது எவ்விடத்தில் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு அதனைக் காத்துக் கொள்ளுதல்
பா.எண் 372 வேண்டும்.
வாய்வுள்ள இடந்தான் கற்பமாகும். ~~மனிதனின் பிறப்பிடமான யோனிதான் மூக்காகும்.~~ மூச்சானது நெறிமுறைப் படுவதற்கு வெண்சாரணையை இடித்துச் சாப்பிடவும்.

202. <u>வெண்சாரணை கற்பம்</u>: - ~~இனை~~ சாப்பிடும் முறைமையைக் கூறுகிறேன் கேட்பீராக! கொடியின் முனையில் சாந்து
பா.எண் 373 வானது இருக்கும். சாந்து வானது உருகி விந்துப்பையில் சேரும். உண்ணும் முறையை நான் கூறுகிறேன். மனக்கண்ணில் நினைவு நிறுத்தி 40 நாட்கள் தவம் செய்வாயாக!

203. <u>வெண்சாரணையின் பெயர்</u>:

பா.எண் 374 இவ்வாறு 40 நாட்கள் செய்து வர அருவி பாயும். அதைப் பிடித்து சாப்பிடுவாயாக! ஒரு பிடி தான் கையில் இருக்கும். இரண்டு பக்கமும் ஒன்றாய்ப் போகும். வெண்சாரணை இதற்குப் பயன்படுத்தலாகும். காரமென்றும் இரவியென்றும் சிவமென்றும் இதற்கு வேறு பெயர்களாகும்.

204. இக்கற்பத்தைத் தொடர்ச்சியாக உட்கொண்டால் சிவன், பிரமன், திருமால் ஆகியோர் அனைவரும் நீயே யாவாய். உடலானது அணைக பலம் பெறும். ஆகவே இக்கற்பத்தை விருப்பத்துடன் உண்பாயாக! அவ்வாறு கொள்ள வாக்கு சித்தி, அமிர்த சித்தி, ஆகியவை கை வரப் பெறும்.

பா.எண் 375

700 புண்ணாக்கீசர் பாடல்கள் 1213

205. இமயத்திலிருப்பவரான ஈசனுடைய திருவருளால் சோதி மயமாய் விளங்குகின்ற மனத்திலே ஞானநெறியாய் விளங்குகின்ற பூரண நாதத்தின் தன்மையை அறிய முற்படுவர்.

206. காலடி சுத்தி வழலை உப்பாகும். மாலடியில் அருளானது வெளுக்கும். ஏழு பிறப்பால் இந்திரியம் சாகும்.

207.

நேரமான வழலையையும் அறிய மாட்டார்கள், வாதத்தின் அடி இதுவாகும்.

208. கற்பூரத்தை அரை எடை அளவு சேர்க்கவும். வெடியுப்பை
நான்கெடை சேர்க்கவும். திடப்புளி நான்கெடையும்
சினம் ஈரெடையும் சேர்த்துக் கொள்ளவும். 1.3லி
சாற்றை ஊற்றி அரைக்கவும்.

209. மூன்று மணிநேரம் அவ்வாறே அரைத்த பிறகு வில்லை
(குளிகை)
-களாகச் செய்து வெயிலில் வைக்கவும். காய்ந்த
பிறகு எடுத்து மூன்று வரட்டியில் புடமிட அண்ணமாகும்.
அதனுடன் தண்ணீரையும் சாற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

210. வீரத்துடன்
சேர்க்க தண்ணீராய் விடும்.
வீரம் ஒன்றுக்கு பத்துக் கொன்றாகக் கொடுக்கலாம்.

211. பத்துக்கு ஒன்றாகக் கொடுத்து எடுத்துப் பொடித்துக்
கொள்ளவும். அதனால் சித்துகள் கைவரப்பெறும்.
சரக்குகளில் அவற்றைக் கொடுக்க அவை ஒடுங்கும்.

212. சென்றான மேலமாய் நின்றது வழியை உப்பாகும். அது இல்லாவிட்டால் சிவனை யாரும் அறிய மாட்டார்கள்.
யாதும் கிடைக்கக் காண்பீர்கள்.

213. யாரும் காணாத பொருளைக் கண்டவர்கள் ஞானியாவார். திருவடியைச் சேர்வார். வெட்ட வெளியைக் காண்பதற்கு ஆண், பெண் இருவரும் செல்வர்.

214. இரண்டு பேரையும் நன்கு அறிவார். பெண்களை அறிந்தாலும் பித்தனான சிவபெருமானைக் காண மாட்டார்கள். தொண்டுள்ளத்துடன் தேடிப்பார்த்தால் நிச்சயமாய் கிடைப்பான். எட்டு திசைகள்தோறும் பரவி இருப்பான்.

215. சட்டைமுனியாவன் என் மகன் தான். குருக்கு வித்தையை நான் அவனுக்குக் கூறினேன். பிழைக்கும் வழியாகிய மூன்றினை நான் எடுத்துச் சொன்னேன். நந்தீசர் எனக்குக் குருவாவார்.

216. இறைவியானவள் அருளைக் கூற பொருள் புரிந்தது.
நான் பெற்ற அனுபவத்தை, எனக்குத் தெரிந்தவற்றை
நாட்டிலுள்ள அனைத்து ஆன்மாக்களும் (பக்தர்கள்)
நன்கு வாழட்டும் என்று கூறினேன். மதியமூர்த்தத்தைப்
பெற்றுக் கொண்டால் வாதமானது கிடைக்கும்.

217. வாதங்கள் வேண்டுமென்றால் வளாகத்தில் பூசை
செய்து சிதம்பரத்தையும் நாள்தோறும் பூசை செய்து கொள்ளவும்.
அவ்வாறு செய்வதில் வல்லவனாகி அவனே சிவனையும்
பார்ப்பான்.

218. ஆண், பெண் என்று குறிப்பிட்டுக் கூறும் இரண்டும்
சரக்குகளைக் கொல்லும் தன்மையது.
என்றால் தான் உனக்குப் பதில் கொடுக்கக் கூடியது.
அண்டத்தில் (முட்டையில்) நீரை விடவும்.
இவ்வுலகிலுள்ளோர் வாழ்வதற்கு வேதைகள் கூறுவேன்.

219. குருவைக் கூறுகிறேன் கேட்பீராக!
சிவத்தின் சுண்ணத்தையும் சேர்த்து ஆறு மணிநேரம் அரைத்து
குளிகைகளாகச் செய்து கொள்ளவும். அதனை 1000
வரட்டியில் புடம் வைத்தெடுக்க சுண்ணமாயிருக்
-கும்.

220. கல்லுப்பைச் சுண்ணமாகச் செய்வதற்கு ஆறு மணிநேரம் அரைத்துக் குளிகைகளாக்கிக் கொள்ளவும். அதனை வெயிலில் வைத்து உலர்த்தி 1000 வறட்டியில் புடம் வைக்கவும். ஆறிய பின் எடுத்துப் பார்க்க உப்பு சுண்ணமாயிருக்கும்.

221. மேற்கூறப்பட்ட உப்புச் சுண்ணத்துடன் சினக்காரம், சூடனை வகைக்கு சமபாகமாக எடுத்துச் சேர்த்து கல்வத்தில் போட்டு அரைத்துக் கொள்ளவும்

222. அரைத்ததை நன்கு கலந்து குளிகைகளாகச் செய்து கொள்ளவும். அதனை 10 வறட்டி அடுக்கி அதில் புடமிட்டு எடுக்க சுண்ணமாகியிருக்கும். இதனுடன் சாரம், வீரம், பூரம் இவற்றைப் பொடித்துச் சேர்த்துக் கொள்ளவும்.

223. மேற்குறிப்பிட்ட அனைத்தையும் சேர்த்து ஏழு நாட்கள் அரைக்கவும். அதனை 48 மணிநேரம் அரைத்து குளிகைகளாகச் செய்து வெயிலில் மூன்று நாட்கள் உலர வைத்துக் கொள்ளவும். பிறகு அதனைச் சிப்பியில் அடைத்து வைக்கவும்.

224. பின் அதற்குச் சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ளவும். மூன்று வரட்டியினாலான புடத்தில் வைத்து எடுக்க சுண்ணமாகும். செய்நீருக்குள் வீரத்தைப் போட அது சரக்கனைத்தையும் கொல்லும்.

225. அப்பூரத் தண்ணீரை வீரத்துடன் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். பின் அதனைத் துருசின் மேல் பூசி அப்பவும். நான்கு நாட்கள் நீரினை மென்மேலும் செலுத்தவும். ஐந்தாம் நாளில் சரக்கினைப் புடத்தில் வைத்து புடம் போடவும். ஆறிய பின் எடுத்துப் பார்க்க துருசச் சுண்ணமாகும். இது சிங்கிக்கு உபயோகப்படும்.

226. சிங்கியான துருச சுண்ணத்தை செய்நீர்க்கு வைத்து பூசினால் அனைத்துச் சரக்குகளும் கட்டும். சில மெழுகுமாய் விடும்.
உருதிடச்
சுண்ணமாகும். வங்கத்தில் பூசி உருத சுண்ணமாகும். நிமிளையிலும் துருச சுண்ணத்தைப் பூசிக் கொள்ளவும்.

227. நிமிளைச் சுண்ணமாகும். சாரத்திலிட்ட சாரச்சுண்ணமாகும், வீரத்திலும் துருச சுண்ணத்தை அப்ப காரச்சுண்ணமாகும். கார சாரத்தை செய்நீர்க்கு வைத்து அப்ப அதனால் பல கோடி வித்தைகள் கைவரப்பெறும்.

228. காரசாரச் சுண்ணத்தைக் காந்தத்தின் மேல் பூசிக் கொள்ளவும். அதனை புடமிட்டுத அச்சத்தானது ஈயம் போல் உருகும். அவ்வாறே பூசிய பிறகு ஊதத அன்ட ஈயமாகி நிற்கும்.

229. ஈயங்களில் சிப்பி ஈயம், பாஷாண ஈயம், உலோகம் ஆகிய ஈயத்தின் வகைகள் எட்டாகும். இவ்வீயங்களுக்குக் கொடுக்க அளவுள்ள சுண்ணமாகும். இச்சுண்ணத்தில் அனைத்துச் சரக்குகளைக் காட்ட அனைத்தும் கட்டும்.

230. கட்டிய சரக்குகளைச் சுண்ணத்தில் போட்டு காரநீரை ஊற்ற போடப்படும் அனைத்துச் சரக்கும் மெழுகாகும். இதனால் எட்டு வகை லோகங்கள், அறுபத்து நான்கு வகைச் சரக்குகளும் வேதையாகும். எனவே மெழுகானவற்றை எடுத்துக் கொள்ளவும்.

231. அவ்வளவிற்குச் சமமாய் துருசினைச் சேர்க்கவும். அதனைப் பீங்கானில் எடுத்து வைக்க நீராய் விடும். இச்சிறப்பான நீரின் போக்கு யாருக்கும் தெரியாது. இந்நீரினால் மணியும் பொன்னாகப்பெறும். இந்நீரினால் இசம் பேதிக்கும். தண்ணீராகும்.

232. பாடல் செம்மையாக இல்லை

233. (இரச) வாதங்களைத் தெரிந்து கொள்வதற்கு ~~[illegible]~~ கவனத்துடன்
அமிர்தத்தைக் கொள்ளுவாயாக! சிவன் என்று தேடுபவருக்கு
இரவுமில்லை. பகலுமில்லை. ~~காயசித்தியை உடலத்தை~~
உடலைச் சுத்தம் செய்து காயசித்தியாக்கிக் கொள்வாய்.
கற்பத்தை உட்கொண்டு முதுமை அகற்றி இளமையாவாய்.

234. கர்மங்கள், தர்மங்கள், வர்மங்கள், சுரங்கள் எதுவுமில்லை
அன்பர்களா, வர்மங்கள் யாறுமில்லை எதுவுமில்லை. கற்பம் உண்பாருக்கு.

235. கற்பம் கொள்வாருக்கு நெந்தங்கள், அங்கங்கள், . மானம்
எதுவுமில்லை.

236. சீவன் எதுவுமில்லை என்பதை உற்றுணர்ந்து பார்ப்பாயாக!
நரகம், சொர்க்கம், நல்வினை தீவினை என்று உலகில்
ஏதுமில்லை. ஞானிகளே ~~[illegible]~~ க்கு மாயுள்ளனர்.

237. கற்பம் உண்ப~~வருக்கு~~டான் இவ்வுலகிலுள்ள
அனைவருக்கும் முக்தி கிடைக்கும். இறந்தவர்
அவர்தம் பெற்றோர் அகிலவுறாது பிறப்பு வெறும்.

கட்டைகள் மற்றும் தீணைவை என்று எண்ணும் பழகாத அமையாது அவர்க்கும் வீடுபேறு கிடைக்கும்.

238. உடல் வேறு என்று அறிய மாட்டார்கள். தாங்கள் ஞானி என்று குறிக்கொள்வார்கள். அவருக்கு மான பங்கங்கள், மாதிலங்கள், உயிர், உடல் என்று ~~[illegible]~~ ஏதுமில்லை.

239.

240. சிறந்த குணங்களுள்ள தேவர்கள், அவருடைய செயல்கள், பெருமை பொருந்திய முனிவர்கள், இருடிகள் ~~[illegible]~~ என்ற வேறுபாடு கற்பம் கொண்டவருக்குத் தெரியாது. வாதச் செய்கைகளும் அவற்றின் திறனைத் தவிர பிற இல்லாதது போலாகும்.

241. உலகிலுள்ள உயிர்கள் அதற்குண்டான வழிகள் ஏதுமில்லை. விருட்சங்கள் ஏதுமில்லை. அனைத்தும் கற்பமே. தேவாரங்கள், நல்ல கதைகள் என்று அதிலேயே உளன்றி சிவனடியே கதியென்றிருப்பார்.

242. இராமாயணம் போன்ற காவியங்களை எப்போதும் படித்து வருபவர்களுக்கு என்றுமே முதுமை வராது. அறிவு என்றுமே அழியாது. இத்தகைய யோகத்தை அவர்கள் கைவரப்பெற்றவராவர்.

243. யோகத்தைக் கைக்கொள்ள வேண்டும். ஆகாயத்தில் செல்லும் வித்தையை அறிந்து கொள்ள வேண்டும். தியானத்தை நன்கு அறிந்து உணர்ந்து ஞானியாவாய். தனித்திருப்பதனால் என்ன பயன் உள்ளதென்றெண்ணி மோகத்தைத் தவிர்த்து ஞானத்தைக் கைவரப்பெறுவர். (யோகத்தில் என்ன இருக்கிறது என்று நினைத்து மோகத்தில் ஆழ்ந்து ஞானத்தைக் கைவிடாதே)

244. இவ்வுலகத்திலே பாரம் எதுவுமில்லை. கடினமானவற்றை அம்மையின் பாதத்தைச் சிரத்தின் மேற்கொண்டு செய்தால் எளிமையாகும்.

245. வழலையுப்பு எது என அறிந்தவர்கள், கறியுப்பினை உணர்ந்தவர்கள். குருவாகிய நீர் எனக்கு அண்டீர் மருத்துவத்தை அறிவித்தீர். இரண்டு பேரும் இதனைப் பற்றி பேச நீதியாய், உண்மையாய் இருக்கும்.

உள்முதல் கற்பம் இல்லை சேர்க்கப்பட்டது

246. பூரணமாகிய முறைமையை அறிந்து வாதத்தையும் காண்பதற்கு ஆதி மூலமாகிய இறைவியைக் கண்டு அவளின் அருளைப் பெறுதல் வேண்டியதாகிறது. இருக்கரும் வாதமானது பொய்க்காது. நிலையானது. சத்தியமாக இதனை அனுபவித்துப் பார்ப்பாயாக

247. இறைவியின் பாதத்தை நித்தியமும் பணிந்தால் துன்பம் ஏதுமில்லை. சித்தியடையும் பொழுது அனைத்தையும் அறிந்து முப்புவினை அறிந்து கொள்வார்கள்.

248. முப்பு வானது முடிந்து போன பிறகு தண்ணீரானது அதிகமாகும் பொழுது சரக்குகள் அனைத்தும் அடங்கிப் போகும். என்றால் நாற்பது நாட்களில் படித்து பயன்பெறத்தக்கது. வாதத்துக்கு குருவானது இரண்டாகும்.

எண் 114. சு.எண். 136. அகத்தியர் பெருநூல் மெய்ஞானம்

249. குழிநரி கற்பம் (குழியில் வாழும் நரி) :— குழிநரி ஒன்றை அடித்து எடுத்து வைத்துக் கொள்ளவும். கஞ்சாவை பயிர் செய்து நன்கு முற்றிய பருவம் பார்த்து எடுத்து

ப. எண் 783

நன்கு இடித்து ஒரு துணியில் வைத்து ஆவியில்
வைப்பதற்கு ஏடு கட்டிக் கொள்ளவும். ஊமத்தை
விதையையும் இதனுடனே சேர்த்து வைக்கவும்.
பின்னர் பாத்திரத்தில் சிறுநீர், ஊமத்தஞ்சாறு
கள் ஆகிய மூன்றையும் ஊற்றிக் கொள்ளவும்.

250. அடுப்பேற்றி ~~வைத்து~~ ஏ பாத்திரத்தை மேலேற்றி வைத்து
வேக வைத்துக் கொள்ளவும். வெந்த சருகை அதனுடன்
பா.எண் 784 இலவங்கப்பூ சாதிக்காய் சேர்த்து அரைத்து மாத்திரை
களாய்ச் செய்து கொள்ளவும். அதனைத் தக்க அனுபானத்தில்
தொடர்ந்து சாப்பிட்டு வர வேண்டும். அவ்வாறு ஒரு
வருடம் சாப்பிட கற்பமாகும்.

251. கற்பமருந்து சாப்பிடும் போது இச்சாபத்தியமாய் இருக்க
வேண்டும். காற்று, கடுமையான வெயில் இவை ஆகாது.
பா.எண் 785 கற்பத்தைப் பற்றி யாரிடமும் சொல்லவேண்டாம். தோடமாகும்.
உனக்கிருக்கும் உடைமையை விற்றுவிட்டால்
உனக்கென்ன ஆகும். அது போன்று உன் உடலை
உன் உயிர்க்குக் கொடுத்துவிட்டால் வாதம் உன்னிடம்
வந்து சேரும். நல்லெண்ணெய் ஆகாத பொருளாகும்.

252. புலி யூட்டு கற்பம்

சித்தர்களுக்கு புலியொரு ஒன்று கிடைத்தால் அது
பா.எண் 786 மிகப் பெரிய விஷயம். அவ்வாறே கிடைக்கும் புலியொன்றினை
எடுத்துக் கபாலத்தைத் திருப்பிக் குழியில் வைத்து அதன் மீது எருவாகிய
சாணியைப் போடவும். அதன் மீது கோரக்கர் மூலி
என்றழைக்கப்படும் கஞ்சாவின் விதையைத் தூவவும்
அவ்வாறு வளர்ந்து அதில் ஒரு பக்கமாக எடுத்துக்
கொள்ளவும்.

253. அதனை வேடுகட்டி அவித்துத் தூளாய்ச் செய்து
பா.எண் 787 குளிகைகளாய்த் தட்டி சாப்பிடவும். அவ்வாறே ஒரு
வருடம் உட்கொள்ள வேண்டும். தொடர்ந்து
ஒவ்வொரு நாளும் அவ்வாறே சாப்பிட புலியைப்
போல் நமது உடல் வலுப் பெறும். போதைப்
பொருட்களைக் கைவிட வேண்டும். அவ்வாறு
எந்த போதைப் பொருட்களையும் தொடாதவர்
ஒளி பெற்றிருப்பர்.

254. பொன்னிறமான ஒளியைப் பெறுவர். பெண்போகம்
பா.எண் 788 ஆகாது. எண்ணெயை நீக்க வேண்டும். தில் கத்தின்
ஒன்னர் இரசம் நிற்காது. உமிழ்நீர், கோமியங்கள்
பித்தளையில் தடவ இரசவாத வித்தையாகும்.

இருக்கை, கஞ்சாவினால் மேம்பதவியான
கயிலாய பதவியை (மோட்சத்தை) அடையலாம்.
நீயும் வாத வேலையைச் செய்யும் வாதியாவாய்.

255. கஞ்சாச் செடியின் ஒரு சுணையைச் சிறு நீர் விட்டு
பா.எண் 789 நன்கரைத்து குளிகைகளாய்ச் செய்து கொள்ளவும்.
அதனை வட்டோட்டில் வைத்து சீலை மண் செய்து
கொள்ளவும். அதனை முழு அளவுள்ள புடத்தில்
வைத்து எரித்தெடுத்து ஆறிய பின் பார்க்க பற்பமாக
ஆகியிருக்கும். அதனை அளவறிந்து எடுத்து வெல்லத்தில்
கொடுக்க கிராணி வகைகள் இல்லையாகும். மூன்று
நாட்களுக்குள் இந்நோய்கள் தீரும். பத்து நாட்களில்
அவ்வாறே கொடுக்க வயிற்றுவலி இன்மை இல்லையாகும்.

256. நாற்பது நாட்களில் குட்டம், இறைநோய் இல்லையாகும்.
பா.எண் 790 தேனினைச் சேர்த்துக் கொள்ளவும். அந்த நாற்பது
நாட்களுக்கும் புளி, உப்பினைத் நீக்கி விடவேண்டும்.
நோயாளிகள் இதைச் சாப்பிட்டு இல்லையாகிய பிறகு
நன்றி சொல்வார்கள்.

257. கரப்பான் ஆகிய நோய்கள் தீரும். நூறு வயது வரை
பா.எண் 791 நோயின்றி வாழ்வான். அவனுக்கு இறப்பில்லை.

உணவை மிகவும் வேண்டி துன்பப்பட்டு சாப்பிடுவான். பெருஞ்சத்தம் போடாது. பாதகக் காரியங்களைச் செய்யாது இருக்க வேண்டும். இந்தப் பற்பத்தை ஒன்பது வகை உலோகங்களில் கொடுத்துப் பார்க்க பேய், பிசாசு இவற்றினாலான செய்கைகள் தீரும். செம்பு, வெள்ளி இவற்றில் அப்பற்பத்தைக் ~~கொடுக்க~~ சேர்க்க பத்தரை மாற்று தங்கமாகும்.

258. ஒரு சடையை எடுத்து வந்து சிறுநீர் சேர்த்தரைத்துக் கொள்ளவும். இரசம், கெந்தகம் இவ்விரண்டையும்
பா.எண் 792 சேர்த்தரைத்து குளிகைகளாய்ச் செய்து மேற்சொன்னவாறே முழு அளவுள்ள புடத்தில் வைத்தெரிக்கவும். ஆறிய பின் எடுத்துப் பார்க்க பூரண சந்திரோதி போன்று செந்தூரமாகியிருக்கும். இதனை அளவறிந்து தக்க அனுபானத்தில் கலந்து கொடுக்க கரப்பான், அரையாப்பு, மேகவெட்டை, சோகை, பாண்டு ஆகிய நோய்கள் தீரும்.

259. காசநோய், சிலேத்துமம், ஆகியவையும் தீரும்.
பா.எண் 793 இறக்கப் போகும் தருவாயில் இருக்கும் போதும் சித்தர் இம்மருந்தைக் கொடுக்க குணமாவான். தலை வழக்கும் அளவுக்கிருக்கும் நோய்களெல்லாம் இச் செந்தூரத்தால் தீரும். உலோகங்களில் கொடுக்க பதினாறு மாற்றாகும்.

எண் 212, அ.எ. 192. அவுரி கற்பம் (309) அனுபவ வைத்தியம்

260. அவுரி என்னும் மூலிகையைத் தேவையான அளவெடுத்து அரைத்து 1000 வராட்டியில் புடமிட்டெடுத்துக் கொள்ளவும். ஆறிய பின் எடுத்துப் பார்க்க நீறிப் போகும். இந்நீற்றினை உலகிலுள்ளோர் பாராட்டிக் கூறுவர். இதனை அளவறிந்து தக்க அனுபானங்களில் கொடுக்க பாண்டு வகைகள், வீக்கம், சோகை, மகோதரம் ஆகிய நோய்கள் குணமாகும்.

அ.எ. எண் 192 மற்றும் 221 உள்ள புத்தகங்களை பார்வையிட்டு [illegible] [illegible] வேண்டும். 23/3/2001.

261. **எண் 223, அ.எ. 575. தன்வந்திரி சுவைக்கியானம்.** (புத்தகத்திலேயே உரை எழுதப்பட்டுள்ளது)

பா.எண் 415

கருங்கையாந்தகரை வேர் சமூலத்தை எடுத்துக் கொள்ளவும். விராக சுண்ணம் 5கி ஐ எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும். அவ்வாறு கற்பத்தைக் கையாண்டால் பழைய தோல் உரிந்து புதிய தோல் பிறக்கும். நரை திரை நீங்கும். கற்பமாகும்.

262. <u>மேனி கற்பம்</u>. - மேனி கற்பமானது கீழ்வருமாறு.

பா.எண் 416

குப்பைமேனியின் சுத்தி செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். 5கி முப்பு சுண்ணத்தைச் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். அதனை நாற்பது நாட்களுக்குத் தொடர்ந்து கொடுக்க உடலானது வச்சிரம் போல் உறுதியாகும். தோல் உரியும்.

263. மேனி என்றும் குப்பைமேனியினான கற்பத்தைச் சொன்னேன். பண்புள்ள அசுவினியே. நெறி தவறாது வழிமுறையில் நடக்க வேண்டும். ஐம்பூதத்தோடு சேர்ந்து புத்தியுடன் செயல்பட வேண்டும். நம் செயல்வினைகளை நினைத்துப் பார்க்க வேண்டும். சிவயோகத்தைக் கண்டு அதில் திளைக்க வேண்டும். காமங்களை, பொய், களவு, சூதை நீக்க வேண்டும்.

பா.எண் 417

264. பொய்யுடன் கொலை கோபம், திருட்டுக் குணம், கன்னமிட்டு திருடுதல், ஆகிய தீமை பயக்கும் குணங்களை நீக்கி மனதை அதனின்றும் விலக்கி பூரணமாகிய தெய்வத்தின் மீது பற்றினை வைக்கவும். அவ்வாறு வைத்து ஓங்காரத்தை மனதில் நினைத்து பற்றியிருப்பார் யோகிகளாவார்.

பா.எண் 418

265. மேற்சொன்னவாறு நீக்க வேண்டியவற்றை நீக்கி கொள்ள வேண்டியவற்றைக் கொண்டால் மூச்சுப் பயிற்சி கைவரப் பெறும். மூச்சானது ஒழுங்கான நெறிமுறையில் செல்லும். ஒரு மனதுடன் இருந்து செயல்படுபவரானால் பல்வேறு வித சித்துக்கள் கைவரப்பெறும். நாட்டிலுள்ள மக்களுக்கு இந்த நூலை நீ கொடுத்தால் நரகத்திலே விழுவார். அதாவது நன்முறையில் பயன்படுத்தாது வாடுவர்.

பா.எண் 419

எண்.253: சு.எண் 463. வரிசை 500.

செங்கருக்காய் கற்பம்

266. மற்றுமொரு கற்பம் கீழ்வருமாறு. செங்கருக்காயை
பாடல் எண் 303 எடுத்து சிறுநீரில் ~~தண்ணீரில்~~ ஊறப்போட்டுக்
கொள்ளவும். அவ்வாறே செய்ய சுத்தியாகும். தூய்மை
யாக்கப்பட்டதை எடுத்துப் பொடித்து கலசத்தில் அடைத்துக்
கொள்ளவும். அதில் மூவிரலளவு எடுத்து வெந்நீரில்
கலந்து சாப்பிடவும். அவ்வாறே 40 நாட்கள் உட்கொள்ள
-வும்.

267. பெரியதான மிளகு ஒன்றினை எடுத்துப் பசுவின்
கோமியத்தில் ஊறப் போட்டுக் கொள்ளவும். அந்த மிளகில்
பாடல் எண் 304 ஐந்தைந்தாக தினமும் எடுத்துச் சாப்பிடுவாயாக. இருபது
நாள் அவ்வாறே சாப்பிடுவாயும். பிறகு ஐந்தாகக் குறைத்துக்
கொள்ளவும். மற்ற பக்குவங்கள் கீழ்வருமாறு.

268. அவ்வாறு மிளகைக் கற்பமாக உட்கொள்ளும் காலத்து
பாடல் எண் 305 அமுரி எனும் சிறுநீரைச் சேர்த்துக் கொள்வாய். அதில்
தேற்றான் விதையைப் போடவும். 4 கி உப்புச் சுண்ணத்தையும்
சேர்க்கவும். அந்நீர் தெளிந்து போகும். இது கற்பத்துக்கு
மேலும் உண்மையைச் சேர்க்கும்.

269. அந்நீரினைக் காலையில் மட்டும் உட்கொள்ளவும். மாலையில் சூரணத்தைச் சாப்பிடவும். அதற்குண்டான பக்குவம் கீழ்வருமாறு, கரிசாலை, குப்பைமேனி செருப்படி, விடத்தலை, சிவதை, பொற்கொன்றை, கரந்தை தூதுவளை, அவுரி

பாடல் எண் 306

270. வல்லாரை, அங்கோலவித்து, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கடுக்காய்வித்து, மருதோன்றி, வெள்ளைப்பூ, மல்லிகைப்பூ, நிலப்பனங்கிழங்கு ஆகியவற்றை வகைக்கு 35கி எடுத்து முறைப்படி சூரணமாய்ச் செய்து கொள்ளவும். இச்சூரணத்தின் எடையில் எட்டிலொரு பாகம் கற்கண்டைச் சேர்த்துக் கொள்ளவும்.

பாடல் எண் 307

271. அச்சூரணத்தில் மூவிரலளவெடுத்து வெள்ளாம் பன்றியின் நெய்யில் கலந்து 40 நாட்களுக்கு, மாலையில் மட்டும் கொள்ளவும். காலையில் முன்சொன்னவான கற்பத்தை உட்கொள்ளவும். இவ்வாறே காலையிலும் மாலையிலும் கொள்ள உடலிலுள்ள தீயநீர் வெளியேறும்.

பாடல் எண் 308

272. வாதபித்தம் பித்தம், இறுகிப்போயிருக்கும் கோழையானது கரைந்து வெளிப்படும். அமிர்தமானது ஊறிப் பெருகும். உடலிலுள்ள நரம்புகள் முறுக்கேறி நிற்கும். விந்தானது நீர்க்காது கட்டி மணி போலாகும். இவ்வுலக மாயத்தில் சிக்கிக் கொள்ளாதே!

பாடல் எண் 309

273. இவ்வுலக வாழ்க்கையில் உழன்று சிக்கி
கவலைப்பட்டுக் கொள்ளாது தனித்திருந்து நாள்தோறும்
மூச்சின் வழிமுறை நோக்கவும். அவ்வாறின்றேல்
இவ்வுலகமானது கைவரப்பெறாது என்று இந்நூலில்
சொல்லியுள்ளேன். எதையும் பார்க்காது உலகத்தோர்
கேட்டார்கள். மனத்தை எங்கும் அலையவிடாது
பெரியவர்களுடன் சேர்ந்து நற்காரியத்தைச் செய்பவர்கள்
சித்தர்கள் என்றழைக்கப்படுவர்.

பாடல் எண் 310

274. உருத்திர கற்பம் :- ருத்திரனான கற்பம் கீழ்வருமாறு.
சீந்திலின் அடிவேரைத் தோண்டி எடுக்கும் போது ஒருத்தன்
ஆழத்திற்கு வெட்டி ~~எடுத்து~~ பெரிய கிழங்கினை எடுத்து
வாசியையும் மூச்சினை உள்ளே அடக்கி வாலையைத்
தியானம் செய்து கொள்ள வேண்டும்.

பாடல் எண் 312

275. தியானித்து என் தாயுடைய கிருபையினால் கிழங்கினை
எடுத்துக் கொள்ளவும். அதன் மேல் தோலினைச் சீவிப்
போட்டு துண்டு துண்டாய் வெட்டிக் கொள்ளவும். அதனை
நிழலில் உலர்த்தி இடித்துப் பொடித்துக் கொள்ளவும்.
தூளாக்கிய பொடியில் எட்டிலொரு பாகம் சர்க்கரையைச்
சேர்த்து நன்கு கலந்து வைத்துக் கொள்ளவும்.

பாடல் எண் 313

276. மேற்சொன்ன சூரணத்தைக் காலை மாலை இரு வேளைக்கும் கொடுத்து வரவும். சீந்தில் தண்டை எடுத்து மேல்தோலைப் போக்கி நைய இடித்துக் கொள்ளவும். 35கி தண்டுக்குத் தேவையான அளவு தண்ணீரை விட்டு தியானம் செய்து எட்டொன்றாய்ச் அருக்கிக் குடிநீராய்க் காய்ச்சிக்கொள்ளவும்.

பாடல் எண் 314

276. காய்ச்சிய குடிநீருடன் சூரணத்தையும் சம அளவு சேர்த்து குடிக்கவும். அவ்வாறே 40 நாட்கள் உட்கொள்ள நரை, திரை நீங்கும். காய சித்தியுமாகும். இம்மருந்தை உட்கொள்ள இறப்பில்லை. தாயின் கருணையினால் அருள் பொருள் அனைத்தும் அதிகமாகும்.

பாடல் எண் 315

277. சித்தியுக்குச் சாவு ஏதுமில்லை. பரிபாஷையாகச் சொல்லி வைத்தார் சித்த கற்பத்தைச் சாப்பிட்ட பிறகு வேறொரு கற்பத்தைக் கூறுகிறேன்! கேட்பீராக! மலமானது கட்டிக் கொண்டு வெளியேறவில்லை யென்றால் சதுரக் கள்ளியை எடுத்துக் கொள்ளவும்.

பாடல் எண் 316

278. சதுரக்கள்ளிக் காய் 35கி எடுக்கவும். கற்றாழைச் சோறு 105கி, கடுக்காய் 35கி எடுக்க. கடுக்காயிலுள்ள கொட்டையை எடுத்து விட்டுப் பொடித்துக் கொள்ளவும் அனைத்தையும் ஒன்று சேர்த்துக் கையினால் பிசைந்து வடிகட்டி தண்ணீரை எடுத்து அதனுடன் 10கி விளக்கெண்ணெயைச் சேர்க்கவும்.

பாடல் எண் 317

279. கட்டிப்போன மலங்கள் வெளியேறும். வழலை அனைத்தும் நீங்கும். பால் கந்தியை வைத்துக்குடிக்க மேலே இருக்கும் பித்தமனைத்தும் கீழே இறங்கிப் போகும். தீமை ஒன்றும் ஏற்படாது. மலங்கள் அனைத்தும் வெளியேறிவிடும். நோய் மற்றும் தீயவை பலவற்கிய பன்னத்தில் இருக்கும் போது கற்பத்தை நோக்குவாயாக. (பாடல் எண் 318)

280. சட்டைமுனிவருடைய சாத்திரத்தில் கற்பம் பற்றியவை நிறைய உள. இதிலுள்ள கற்பவிதியைப்போல் யாரும் உரியதில்லை. பலரும் பல்வேறு முறையாய்க் கூறினார்கள். இந்நூலிலுள்ள கற்பங்களைக் கருத்துடன் பார்க்க வேண்டும். (பாடல் எண் 319)

281. பத்தியத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக. புகை, புளி உப்பு எண்ணெய், பெண்போகம், அண்ணாப்பு, மோர் துவர்ப்புப் பொருள், கடுகு உள்ளி, நித்திரை, சோம்பல், ஆகியவை கற்பம் கொள்ளும் போது ஆகாத பொருட்களாகும். (பாடல் எண் 320)

282. மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும். மவுனத்தைக் கைக்கொள்ள வேண்டும். அறிவை வென்று வேதாந்த சாத்திரத்தை அறிதல் வேண்டும். ஞான விதியைப் படித்து கர்மமாகிய பாதகச் செயல்களை நீக்க வேண்டும். (பாடல் எண் 321)

30/11.

283. கற்பத்திற்கான பத்திய முறை கீழ்வருமாறு. பசு நெய், பசும்பால் தேன், சிறுபயறு, முருங்கை, வேழை என்று சொல்லப்படுகின்ற வழுதலங்காய், தூதுவளை இலை நெல்லிக்காய், அவரைக்காய்,

பாடல் எண் 322

284. பீர்க்கங்காய், பொன்னாங்காணி சிறுகீரை, கஞ்சா வெள்ளாடு, காடை வல்லாரை, முயல், மான், மரை ஆகியவை பத்தியத்திற்கான உணவுப் பொருட்களாகும்

பாடல் எண் 323

285. பத்தியத்திற்கான சோறு கீழ்வருமாறு. கருங்குறுவை நெல்லினைக் குத்தி அதில் ஒரு வடியில் வாடல் அத்தமாகத் தட்டி எடுத்து ஒரு கைப்பிடியளவு போட்டு சோறாகச் சமைத்து ஒரு நேரம் சாப்பிடவும். பராபரத்தைப் பூசை செய்து ஒரு வேளை வெந்நீரைக் குடிக்கவும்.

பாடல் எண் 324

286. பழம், சீனி, ஆகியவற்றைச் சாப்பிட்டு மேற்சொன்னவாறே பத்தியத்தைக் கைபற்றிக்கொள்ள வேண்டும். நீ வாலையை தினந்தோறும் பூசை செய்வாயாக! ஞானமாகிய அமிர்தத்தை, ஆகாயமாகிய பெருவழியில் நின்று நீ உன்னை அது வந்தடையுமாறு செய்து கொள்வாயாக! அத்தனைந்த வெளியில் நிற்பாயாக!

பாடல் எண் 325

287. தன்னிலையை அதாவது நம்முடைய நிலையை நாம் அறிந்து, நினைந்து பார்க்க வேண்டும். எப்போதும் குருவின் பதத்தைச் சார்ந்தே இருக்க வேண்டும். நம் மனத்தை நாமே அறிந்து கொள்ளுதல் வேண்டும். கற்பத்தை அறிந்து அதில் நமக்கு உகந்தது எது என்று பார்த்து சாப்பிடுதல் வேண்டும். கொடிய தன்மையைச் செய்விக்கின்ற கோபத்தை நீக்குதல் வேண்டும். ஆகாயத்தில் பறந்து செல்லும் வழியைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

பாடல் எண் 326

288. மிதண்டக்குடிநீர்:- கற்ப மருந்தை உட்கொள்ளும் போது உடலில் வெப்பமானது அதிகமானால் மிதண்டக் குடிநீரைக் கொள்ள வேண்டும். அறுகம் வேரை ஒரு பிடியளவு எடுத்து அதனுடன் 25 மிளகைச் சேர்த்து 1.3லி தண்ணீரில் போட்டு முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி 165மி.லி யாகச் சுண்டிய பிறகு வெண்ணெ-யைச் சேர்த்து கொள்ளவும்.

பாடல் எண் 327

தலை முழுக பஞ்ச கற்பம்:-

289. அ.அகி வெண்ணெயைக் கலந்து கொடுக்க உடல் வெப்பம் தீரும். தலை முழுகுவதற்கான மருந்து கீழ்வருமாறு. மிளகு, கடுக்காய், நெல்லி, சாதிக்காய், கொட்டை, வேம்பு பருப்பு மஞ்சள், ஆகியவற்றைப் பசும்பாலில் அரைத்து நன்கு காய்ச்சி தலையில் தேய்த்து முழுகிக் கொள்வாய்.

பாடல் எண் 328

290. ~~தலை முழுக பஞ்ச கற்பம்~~

மேற்கூறிய பொருளைத் தேய்த்து 15 நாட்களுக்குத்
தலை முழுக வேண்டும். நெய், மிளகு
பாடலெண் 329 பெண் போகத்தை நீக்கி விடவும். மாயமான
செய்கைகளிலும் தீயவற்றிலும் புத்தியைச் செலுத்தாதே
அவ்வாறு செய்தாயானால் கற்பமானது நிலை நிற்காது.
மனத்திலுள்ள அழுக்கு நீங்கி மனம் தூய்மை பெறும்.
தீவினைகள் நீங்கும்.

291. காயசித்தியை நீ இவ்வாறு அறிந்து கொண்டு
மனதில் நிலைநிறுத்தி மனதைத் தூய்மைபடுத்திக் கொண்டால்
பாடலெண் 330 அமிர்தத்தைச் சாப்பிட்டு உயிர் வாழலாம். அப்போது
ஒரு வருடமானது ஒரு நாள் போல் உனக்கு தோன்றும்
அதாவது அவ்வளவு விரைவில் காலமானது செல்லும்.
முன்னர் நாம் செய்த பழைய வினைகள் நீங்கும். அப்போது
குருவின் பாதம் உனக்குத் தோன்றும். சிவப் பதத்தில் நீ
நிலை பெற்றிருப்பாயாக.

292. மனமாகிய குரங்கை ஒரு இடத்தில் நில்லென்று
கூறினாலும் நிற்காது. எப்போதும் அலை பாய்ந்து கொண்டே
பாடலெண் 331 இருக்கும். அவ்வாறுள்ள மனதை ஒரு இடத்தில் நிலை
பெறச் செய்ய மௌனத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
தியானத்தைக் கடைபிடிக்க வேண்டும். அப்போது
மௌனமாகிய வித்தை கைவரப்பெறும்.

292. கொல்லென்று கூறினாலும் கோடிக்கு ஒன்றேயாகும். சொன்னாலும் அதைப் புரிந்து கொள்ளவில்லையென்றால் என்ன சொல்வது. கொல்லென்று கூறுவதால் உலகம் தான் உன்னைக் கொல்லும். சேர்ப்பதற்கும் மவுனத்தை நான் ~~[illegible]~~ கூறுவேன்.

எண். 213. சு. எண். 2. அகத்தியர் வைத்தியம் 1200.

293. சூடன் வைப்பு:-
சூடனின் வைப்பு முறையைக் கேட்பாயாக! வாழைக் கிழங்குத் தண்ணீரை 13லி எடுக்கவும். அதனைச் செம்புப் பாத்திரத்தில் ஊற்றவும். வெடியுப்பினை 1400கி எடுத்துப் பொடி செய்து அதிலுடன் சேர்க்கவும். அடுப்பேற்றி செம்புப் பாத்திரத்தை வைத்து எரியூட்டி நன்கு வற்றி குழம்பு போல் ஆகும்.

294. குழம்பு பக்குவத்தில் வரும் போது கருவாப்பட்டையைப் பொடித்துச் சேர்த்து தைலமாய்க் காய்ச்சிக் கொள்ளவும். பக்குவத்தில் இறக்கி ஆறவிட்டு எடுத்து வைக்கவும். பின்னர் அதனை உளியால் வெட்டி பரணியில் அடைக்கவும். இதன் பெயர் தான் சூடன் வைப்பாகும்.

சரிபார்ப்பு உள்ளது 13/3/01

295. தின்னிக் கற்பூரம் வாட்டுத் தீபம்

மேற்கூறப்பட்ட சூடன் வைப்பைப் பொடித்துச் செம்புப் பாணையில் கால்பங்கு போடவும். அப்பாணையின் மீது நீளுள்ள குடத்தை மேலே வைத்து சீலை மண் செய்க.

295. அதனை அடுப்பின் மீது வைக்கவும். இரண்டு விறகு கொண்டு எரிக்கவும். தண்ணீர் இலேசான கை பொறுக்கும் அளவு சுட்டவுடன் தீயை நிறுத்தி பாணையை இறக்கி விடவும். ஆறிய பின் எடுத்துப் பார்க்க கற்பூரம் திண்ணியாகும்.

296. கற்பூர திண்ணத்தில்

தூய சுத்தியாவதற்கு இதன் நெருப்பில் வாட்ட வேண்டும். புகையானது அடங்கி செந்தூரம் ஆகும். விளக்கானது கற்பூர விளக்காக இருக்கும். இவ்விளக்கானது கறுப்பாகாமல் சிவப்பாய் விடும்.

297. <u>அயமுருக்க வித்தை</u>:-

அயமுருக்கும் வித்தை கீழ் வருமாறு. எலி ஆலம்பாலை 560கி எடுக்கவும். 70கி வெங்காரம் 9கி குடோரி எடுக்க. செவ்வல்லிக் கிழங்கினை இடித்துச் சாறு 280கி, கெந்தகத்தைப் பொடித்து 140கி எடுத்துச் சேர்த்துக் கொள்ளவும்.

298. நல்லெண்ணெய் 560கி எடுத்து மேற்சொன்ன அனைத்தையும் அயச் சட்டியில் போட்டுக் கொள்ளவும். சட்டியை அடுப்பின் மீது வைத்தெரித்துக் கொள்ளவும். தயிலமாகிய பக்குவத்தில் இறக்கிக் கொள்ளவும். பின் அதனுடன் 140கி அயப்பொடியைச் சேர்க்கவும். காந்தத்தையும் சேர்த்துப் பொடித்துப் பீங்கானில் போட்டுக் கொள்ளவும். தயிலத்தை ஊற்றி கலந்து கொள்ளவும்.

299. அவ்வாறே மூன்று நாள் வைத்திருக்கவும். பிறகு எடுத்து பாதுகாப்பான குகையில் வைத்து மூடவும். அதனை உலையில் வைத்து உருக்கிக் கொள்ள அயமானது பருமனாகும். அதனை எடுத்துப் பொடியாக்கி தயிலத்தில் கலந்து கொள்ளவும். முன் செய்தது போலவே உருக்கிக் கொள்ள அயமானது நாகமாகும்.

300. நாகமானது சிவந்திருக்கும். தங்கத்தின் எடைக்குச் சமமாய் இதனைக் கொடுக்க வேண்டும். உருகும் போது நாகமானது கட்டும். கல்வத்தில் போட்டு இடித்து நாகத்தின் எடைக்குச் சூதத்தைச் சேர்க்கவும். சூதத்தின் எடைக்குச் ~~சமமாக~~ இரட்டிப்பு அளவு கந்தகத்தைக் கூட்டவும். அனைத்தையும் சேர்த்து மல்லிகையின் சாற்றால் அரைத்துக் கொள்ளவும்.

301. 12 மணி நேரம் அரைத்து விட்டு பிறகு வெயிலில் வைத்து காய வைத்துப் பொடித்துக் கொள்ளவும். காசி என்னும் குப்பிக்கேற்றி வாலுகா எந்திரத்தின் மேலே வைத்து (*) ~~[illegible]~~ 36 மணி நேரமாக இரண்டு விறகு கொண்டு எரித்துக் கொள்ளவும். ~~[illegible]~~ ஆறிய பின் எடுத்துப் பார்க்க செந்தூரமாகும். நவலோகத்துக்கு நூற்றுக் கொன்றாகக் கொடுக்க பத்தரை மாற்று தங்கமாகும்.

(* 12 சாமம் கூட்டவும்)

302. இச்செந்தூரத்தைக 130 மி.கி அளவு உட்கொள்ளவும். 40 நாட்கள் உட்கொள்ள நரை, திரை அனைத்தும் மாறும். உடலானது கருங்கல் போல் வன்மையுறும். மலையைக் கிழித்தினாலும் ~~நன்கு~~ பொடிப் பொடியாய் மாறும். வயதானாலும் இதைச் சாப்பிட்டால் பதினாறு வயதாய் இருப்பர். மூச்சு நெறி முறையுடன் அடங்கி உள்ளுக்குள் இருக்கும்.

303. <u>காந்த சத்து</u>:- காந்தச் சத்து செய்யும் முறை கீழ்வருமாறு. பருக்கைகயாய்ப் பொடித்து அச்சட்டியில் போட்டுக் கொள்ளவும். கொள்ளினையின் சாற்றினால் 12 மணி நேரம் சுருக்குப் போட்டுக் கொள்ளவும். வெள்ளாடு ~~எருத்து அதிலுள்ள~~ இரத்தத்தை ~~நீக்கி~~ தோலில் வைத்துக் கட்டிக் கொள்ளவும். குழியினை வெட்டி, இப்பைக்குள் இதனை வைக்கவும். 10 நாட்கள் அவ்வாறே வைக்கவும்.

304. அந்நாட்கள் கழிந்த பிறகு எடுத்து கல்வத்தில் போட்டு அரைத்து அச்சத்துடன் கொள்ளினைச் சாற்றினையும் விட்டு அதற்குள் காந்தத்தை வைத்துக் கொள்ளவும். மேல் மூடி கொண்டு மூடி சீலை மண் செய்து கஜமான புடத்தில் வைக்கவும். அடுப்பில் வைத்தெரித்து ஆறிய பின் எடுத்து அதனுடன் 1.3லி நல்லெண்ணெய், 675 மி.லி குன்றிமணி ஆகிய வற்றைச் சேர்க்கவும்.

305. கொள் சாற்றில் ஊற வைக்கவும். நன்கு ஊறிய பிறகு எடுத்து கல்வத்தில் போட்டு அரைத்துக் கொள்ளவும். மெழுகு பதத்திலே அரைத்து எடுத்து நல்லெண்ணெயை ஊற்றிக் கொள்ளவும். எலியாலம்பாலின் சாற்றையும் கொள்ளியிலைச் சாற்றையும் சேர்த்துக் கொள்ளவும். அதில் 140கி, வெங்காரம் 70கி பொடித்துச் சேர்க்கவும்.

306. 9கி கிடோரியையும் எடுத்துப் பொடித்து கொள்ளியி-லையின் சாற்றால் அரைத்து நல்லெண்ணெயை ஊற்றி அரைத்துக் கொள்ளவும். அடுப்பேற்றி நன்கு எரித்துக் குழம்பான பக்குவத்தில் இறக்கி காந்தத்தில் கலந்து கொள்ளவும். மூன்று நாள் அவ்வாறே வைத்திருக்-கவும். பின் மூசைக்கு எரியிட்டு உருக்கி விடவும்.

307. வெந்த பிறகு எடுத்துப் பார்க்க நன்கு உருகி ஆறிய பிறகு கரடுமுரடாய்விடும். அதை உடைத்துப் பொடியாக்கி முன் உள்ள குழம்பில் பிசறிக் கொள்ளவும். மறுபடி அடுப்பில் வைத்து உருக்கிக் கொள்ளவும். இவ்வாறு ஏழு முறை வைத்தால் காந்தமானது காந்தச் சத்தாகும். இதை அப்படியே கட்டியாக்க மெழுகானது கட்டி அதாவது இறுகி கிண்ணியாகும்.

208. <u>காந்த கிண்ணி</u> :-

மேற்கூறப்பட்ட அந்த காந்த கிண்ணியிலே குடிநீர்ப் பொருளை ஊற்றுவாய். கற்பப் பொருட்கள் அனைத்தையும் அதில் போட்டு சாப்பிடுவாயாக. இந்த கிண்ணத்தில் சூதத்தைப் போட்டு கடுமைத்தக் காற்றினை ஊற்றிக் கொள்ளவும். அதனை வாலுகையின் மேலே வைத்து பக்குவமாய்த் தீயினைப் போட உள்ளிருக்கும் சரக்கானது உருண்டையாகும். இதை வழித்துப் பத்திரப்படுத்தி 5கி அளவு எடுத்து நோய் தீருமட்டும் சாப்பிடவும்.

209. அவ்வுருண்டையைத் தண்ணீரில் போட்டு மூன்று நாட்கள் கழித்த பிறகு சிறுநீரில் போட்டு ~~சாப்பிடவும்~~. ஆதிக் கடவுளான பராபரனைப் பூசை செய்து அர்ச்சனை செய்து சாப விமோசனத்தைச் செய்து கொள்ளவும். ஆதாரம் நிராதாரத்தை நினைத்து ஆசையில் நினைத்துப்பார்க்கவும்.

310. நினைத்துப் பார்த்து வேறு ஓசைகள் கேட்காத பக்கத்தில் யோகத்தில் அமர்ந்து பிரார்த்தனை செய்து நமசிவய எனும் ஐந்தெழுத்தையும் மூன்றெழுத்தையும் ஊனி இருச் சொல்லி கேட்டுக் கொண்டு மதியில் நின்ற அமிர்தத்தை உண்டு சூரியனைக் கண்ட பனி போல் பாவம் நீங்கும். சிலம்பொலி நாதம் கேட்கும் அப்போது கண்டவர்கள் கற்பத்தை உண்பாயாக.

311. சூத செந்தூரம்:

35கி காந்தத்தை எடுக்கவும். அதனுடன் 35கி தங்கத்தைச் சேர்த்து இரண்டையும் சேர்த்து ஒன்றாய் உருக்கிக் கொள்ளவும். அவ்வாறு உருகும் போது 35கி நாகத்தை உடன் சேர்த்துக் கொள்ளவும். அனைத்தையும் கல்வத்தில் போட்டு பொடித்துக் கொண்டு அதனுடன் சூதத்தையும் 70கி கெந்தகத்தையும் சேர்த்து பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றை விட்டு அரைத்துக் கொள்ளவும்.

312. 18 மணி நேரம் அவ்வாறே அரைத்துக் குப்பியில் வடித்துக் கொள்ளவும். அதனைப் பின் வாலுகா இயந்திரத்தின் மேல் வைத்து அடுப்பெரிக்கவும். தக்க சமயத்தில் எடுத்துப் பார்க்க பனிரெண்டு மாற்றாகும். அதிலிருந்து 500மி.கி தேனில் கலந்துண்ண உடம்பெல்லாம் தங்கமாகும். செந்தூர பதத்தினைப் பார்க்க சிலாகையினால் திராவி பின் ஆற விட்டு இறக்கி தங்கச் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

313. ஒன்பது உலோகங்களுக்கும் நாற்றுக் கொன்றாகக் கொடுத்திட பன்னிரெண்டு மாற்றாகும். அதிலிருந்து 500மி.கி எடுத்துத் தேனில் உட்கொள்ள உடலெல்லாம் பொன்மயமாகும். நரை, திரை மாறும். இறப்புமில்லை. புளி உப்பு இரண்டையும் நீக்கி விட்டு கன்னியின் பித்து விருப்பத்தையும் விட்டு விடவும்.

314. செந்தூரம் உண்டால் பத்தியம்:—

கற்பத்துக்கு உறுதியானவற்றைக் கூறுகிறேன்! கீழ்வருமாறு. உப்பு, புளி இன்றும் ஆகாது. மோர் ஆகாது நல்லெண்ணெய், சுண்ணாம்பு, நித்திரை, சோம்பல் மாமிசங்கள் மீன் கடுகு, உள்ளி, பெருங்காயம் ஆகியவை ஆகாது.

315. கற்பம் உண்ணும் போது அதற்குகான பத்தியவுணவு கீழ்வருமாறு. நெய், பால், சிறுபயிறு, முருங்கை, வெள்ளாட்டுக்கறி, தூதுவளையிலை, தூதுவளங்காய், காடை, கௌதாரி கஞ்சா, பழைமையான வெல்லம் பானகம் ஆகும் என்பதாம்.

316. சிறுகீரை, அரைக்கீரை, புளியாரை, ~~நல்லாரை~~ தரைக்கீரை, பொன்னாங்கண்ணி, நெல்லிக்காய் அவரைக்காய் வழுதுணங்காய் பீர்க்கங்காய், முயல், ஊர்க்குருவி, மரை மான் ஆகியவை கற்பம் உட்கொள்ளும்போது கொள்ளத்தக்க உணவுப் பொருட்கள்.

317. ஒரு (சேர்) 175கிராம் அளவு அரிசியை உட்கொண்டு ஒரு வேளை வெந்நீரைக் குடிக்கவும். மருந்துகளினால் உடலில் வெப்பம் அதிகமானால் பசும்பால் 175கி குடிக்கவும். உள்மூலம், வெளிமூலம் இருந்தால் தேத்தாந்தப் பாலைத் தினமும் பூசிக் கொள்ளவும். குரு பதத்தை நினைந்து அருத்தருத்து உண்ணுகிற கற்பமுறைதனைக் கேட்பாயாக!

318. ~~கற்பத்தைச் சாப்பிட~~ அறுபது வயதானாலும் இளமையாய் ~~இருக்கும்~~ இருப்பதற்கு இருபது நாள் கடுக்காயைக் கொள்ள வேண்டும். முப்பது வயதானால் முப்பது நாட்களுக்குக் கடுக்காயை உட்கொள்ள வேண்டும். நாற்பது வயதானால் நாற்பது நாட்களுக்கும் ஐம்பது வயதானால் பதினைந்து நாட்களுக்கும் கடுக்காயைக் கற்பமாகக் கொள்ள வேண்டும்.

319. ~~அமுரி முறிக்க பாத்திரம்~~ :- வயது அறுபதாய் விட்டால் கடுக்காய் பத்தினைக் கற்பமாய் கொள்ள வேண்டும். வயது அறுபதிற்கும் மேலாகி விட்டால் காயசித்தி ஆகாது. கடுக்காயைப் பொடித்து மெல்லியதான துணியிலே சலித்து மூவிரலளவெடுத்து, சிறுநீரை முறித்து அதில் கிழப்பி கொடுக்கவும்.

320. அமுரி முறிக்க பாத்திரம் :- காந்தமாகிய பாத்திரத்தில் கடல்நீர், சிறுநீரை ஊற்றிக் கொள்ளவும். தேகத்தின் வாங்கி கலக்கி தெளிவினை இறுத்துக் கொள்ளவும். அதில் மேற்சொன்ன கடுக்காய்த் தூளைப் போட்டு மூச்சினை இழுத்து நெறிமுறைக்குள் வைத்துக் கொள்ளவும்.

321. நாள்தோறும் காலை மாலையிலும் குடிநீர்
யென்னை வைத்துக் குடிக்கவும். மிளகு இருபத்தைந்து
ஒரு பிடி அருகம்வேர் எடுத்து இடித்து சட்டியிலே
போட்டுக் கொள்ளவும். அதில் 1.3லி தண்ணீர் ஊற்றி
குடிநீராய்க் காய்ச்சி 165 மி.லியாய்ச் சுருக்கி அதில்
2.கி பசுவெண்ணையைப் போட்டுக்குடிக்கவும்.

322. காலையில் கடுக்காய்ச் சூரணத்தையும் மாலையில்
குடிநீரையும் குடிக்க வேண்டும். தாகம் ஏற்படாது
புளி, உப்பு, எண்ணெய் அனைத்தும் நீங்கும். உடலில்
இருந்த நோய்கள் அனைத்தும் நீங்கும். நீரிழிவுநோய்
தீர்க்கி, வாதமும் இருக்கும்.
(பக்கம். 93ல் காயசித்தி, 94ல் வெம்பு, சர்க்கரை வெம்பு, 95பக்-கற்றாழை,
பக்-97ல் சித்திரமூலம், பக்-98ல் கற்பம் உள்ளது. உடை எழுதவும்.)
(உடை எழுதப்பட்டு உள்ளது பக்-77)

323. ~~அண்ட கற்பம்~~ :- சிவனார் வேம்பை இடித்துச்
சூரணம் செய்து அவ்வளவே வாலுளுவையைச் சேர்த்து
கரந்தைச் சாற்றை ஊற்றி அரைத்து குளிகை
-களாய்ச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.
அவற்றைச் சேர்த்தெரித்து தயிலமாய்க் காய்ச்சிக் கொள்ளவும்.
15கி காலை, மாலை நாற்பது நாட்கள் சாப்பிடவும்.

324. அவ்வாறு உட்கொள்ள கூட்டத்தின் வகைகள் உடலின் தீய நாற்றம், விரக்கடிகள் நீங்கும். உடல் மாந்தளிரின் நிறத்தைப் பெறும், ~~ஆனை நிறங்கப் பெறும்~~. காய சித்தியாகும். பெண்~~[illegible]~~ணாசையை நீக்குதல் வேண்டும்.

325. <u>அண்ட கற்பம்</u> :- அண்ட கற்பம் செய்யும் முறை கீழ்வருமாறு. கருங்கோழியைச் சேவலுடன் எடுத்துக் கொள்ளவும். அதன் முட்டைகள் அனைத்தையும் எடுத்துக் கல்லுப்புக்குள் வைத்துக் கொள்ளவும். இருபது நாள் கழித்து எடுத்துப் பார்த்து அயச்சட்டிக்குள் போட்டு கொடுக்கிழங்கின் சாற்றினை அதில் ஊற்றிக் கொள்ளவும். அடுப்பில் வைத்து எரிக்கவும்.

326. எரிக்கும் போது சாறனைத்தும் அண்டிப் போகும். பிறகு அயச்சட்டியை எடுத்து ஆற வைத்து அதனுள்ளிருக்கும் முட்டையை எடுத்து தோலுரித்து இரண்டாக்கிக் கொள்ளவும். அதனை காலை மாலை இரண்டு நேரமும் சாப்பிடவும். இவ்வாறு நாள்தோறும் ஒவ்வொன்றாக நாற்பது நாட்கள் சாப்பிட உடல் காயகற்பமாகும்.

327. உடலானது சிவந்து போகும். மினுமினுப்பாயிருக்கும். இரண்டு கண்களும் செம்மையாக உள்ள தாமரையைப் போன்றிருக்கும். கைகள் இரண்டும் கல் போன்று வன்மையுடன் இருக்கும். நரம்புகள் இறுக்கமாய் முறுக்கேறும். விந்துவானது கீழே விழாது இறுகி மேலே ஏறும். தோலானது உரியும். இவ்வளவையும் சாதித்துக் கொள்ள வேண்டும்.

328. <u>தலை முழுக:-</u> தலை முழுகுவதற்கான மருந்து கீழ்வருமாறு. மஞ்சள், மிளகு, நெல்லி, வெட்பாலரிசி, கடுக்காய் ஆகியவற்றைச் சமமாய் எடுத்துப் பசும்பால் விட்டரைத்துத் தலையில் தேய்த்து வெந்நீர் விட்டு தலை குளித்துக் கொள்ளவும்.

329. அவ்வாறே தலை முழுகிக் கொள்ள கபாலமானது வலிமையுறும். வாசியானது நெறிமுறைப்படும். உடலிலுள்ள உரோமங்கள் தும்பி போன்று குத்திட்டு நிற்கும். நனைந்துவிட்டாலும் குளிர்ந்து சூடு அதிகமாகும். கண்ணினில் தண்ணீர் வராது. வானத்திலுள்ள நட்சத்திரம் அனைத்தும் பகலில் தோன்றும். உடல் பொன் நிறம் போலாகும்.

330. 675 மி.லி பசுநெய்யினைத் தேய்த்து பயிற்றை அரைப்பாய்த் தேய்த்து இளவெந்நீரில் தலைமுழ்கிவர தலை மயிரானது கருவண்டு போலாகும். கண்ணில் ஒளி அதிகமாகும். அழகினையும் நெட்டித் தேறும்.

331. ~~தாம்பூலத்தின் பாக்கு அண்ணாம்பினைத்~~

அ. எண். 578 , தன்வந்திரி வைத்திய காவியம்

331. விந்துகற்பம் :- பதினாறு சித்தர்களின் வாக்கால் இம்பதுக்குள் தேறுவாய். ~~ஆ~~ யார்க்குத்தான் இது கிட்டும். அறிவான -வர்களுக்கு மட்டும் கிடைக்கும். பார்த்தவுடன் கிடைக்காவிட்டாலும் பிறகு கிடைக்கும். நொடிக்குள்ளே கிடைக்கும் கற்பமான விந்து கற்பம் செய்யும் முறை கீழ்வருமாறு.

பா.எண் 18

332. வெண்கல செந்தூரத்தை உட்கொண்டு உடலில் உள்ள வெப்பத்தை நீக்கிக் கொள்ளவும். மேன்மை ரேசக வாயுவின் நிலை நிறுத்தி ~~அதுபோது~~ தன்னுடைய விந்தினைத் தானே உண்ணவும். காலை, மாலை இருவேளையுமாக 90 நாட்கள் உட்கொள்ள உடலானது எஃகு போல் உறுதியாகும். திரை இன்றி ~~அனைத்தும் தீரும்~~. போகும்.

பா.எண் 19

333. மறுபடியும் செய்தால் விந்தானது கழலாது.
பா.எண் 20 பலமும் நீங்கும். தீது வினைகள் அனைத்தும்
நீங்கும். நீ வேதாந்தியாக ஆவாய். உள்ளத்தில்
கபடுகள் அனைத்தும் நீங்கப் பெற நரம்பெல்லாம்
இறுகும். நாதாந்த யோகி எனும் பெயராகும்.

334. உணவானது ஒரு வேளைக்கு எடுத்துக் கொள்ளவும்.
அவ்வாறே நடைமுறைப்படுத்தி வர பலமிக்கவனாவாய்.
பா.எண் 21 புளி, புகை, பெண் இவற்றை நீக்கவும். கடுகு
போன்ற பதார்த்தங்களை நீக்கவும். இறைச்சி
பசும்பால், பசுநெய், எலுமிச்சம்பழம் வாழைக்காய்,
சேம்பு ஆகிய பதார்த்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும்.
சிவயோகியைப் பார்த்து பிறகு சாப்பிடுவாயாக.

335. மூச்சானது நெறிமுறையில் அடங்கி இருக்கும்.
உன் பெயர் சித்தன் என்று ஆகும். உன் உடலுக்கு
பா.எண் 22 அழிவு எப்போதுமில்லை. மூன்று உலகங்களிலும்
உனக்குச் சமம் யாருமில்லை. நீ சச்சிதானந்த
சொரூபமாகி இவ்வுலகில் பரப்பிரமமாகி விடுவாய்.
நடக்கப் போகும் காட்சியெல்லாம் உனக்குத்
தோற்றமளிக்கும். ஆதிசிவன் உன்னிடம்
இரக்கங்காட்டி அருள் பாலிப்பார்.

336. அர்ச்சனை செய்து இந்நாளைத் தேடினாலும்
பா.எண் 23 அவன், பிரமன், திருமால் இவர்தம் ஆணை ~~இது~~
அதனால் கிடைக்காது. பூசைகளால் அர்ச்சனை
செய்யும் புண்ணியருக்கு சிவனின் செயலால்
இந்நாள் தானாக அவரை வந்தடையும்.
அர்ச்சனை செய்து நாளைக் கொடுத்த புண்ணியம்
செய்தவனே! நாள்தோறும் அவன் பதத்தைச் சிரமேற்
கொண்டு பூசைசெய்து அவமானகரமான அபோதத்தைத் தொல்வினால்
மானிடத்தன்மைகள் நீ அழிந்து போவாய்.

337. உண்மையாய்ச் சொல்லிவிட்டேன் இதுவே
சிவனின் ஆணை. ஒழுக்க முறை தவறாது நடந்தால்
பா.எண் 24 பிரம்மாவின் ஆயுள் தானே கிடைக்கும். நாவென்ற
நாவமுதம் கனியாகும். நாதாந்தமாகிய சிவபதத்தை
நீயே அருளுவாய். நீ மனதில் இவற்றையெல்லாம்
நினைக்காவிட்டால் இறைவனின் சாபம் பொல்லாததாகி
- விடும்!

338. <u>நந்திசர் கற்பம்</u>:- என் குருவின் கற்பத்தைக்
கூறுகிறேன்! கேட்குமாறு. நந்திசர் சொன்ன கற்பமாவது
ஒளியுள்ள, வெப்பமுள்ள வன்னி எனும் நெருப்பு
செம்மையானது. செம்மை என்றால் அது கெந்தகம்.
அக்கெந்தகத்தை நாதமென்று உரைப்பர். அது சக்தியானது
இருவாட்சி மலர் போன்று கன்னியாகவே மணத்துடன்
இருக்கும்.

இதில் கற்பமை, கற்ப முறைகளைப் பற்றிய நீக்கவும்.

339. அந்த கன்னியிலே பற்பல இனங்கள் உண்டு. இரண்டு வர்க்கங்கள் உள்ளன. அது யாருக்குத் தெரியும். தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு சாதிகள் உள்ளன. ? கற்பம் உள்ளது. முதல் சாதியிலுள்ள நாகத்தை எடுத்து நாதாந்த தேவிக்குப் பூசை செய்து கொள்ளவும்.

340. செய்து அந்நாகத்தை எடுத்து அதனுடன் கல்லுப்பை 5 கி சேர்த்துக் கிளறிக் கொள்ளவும். அதனை வெயிலில் வைத்து முடுக. அது பக்குவமான பின்னர் 65 மி.கி ---- அளவு எடுத்து உட்கொண்டு பராசக்தியுடைய அருள் உனக்குக் கிடைக்கும். மூன்றிலொன்று எடுத்து இறைவியைத் தொழுது போற்றவும்.

சி.உ. அகத்தியர் வைத்தியம் 1200.

341. **காயசித்தி மூலி:-**

கரிசாலை, குப்பைமேனி, கரந்தை, வல்லாரை, நீலி, பொற்றலைக் கையாந்தகரை, செருப்படி, ஆகியவற்றை வகைக்குச் சம அளவு எடுத்து நிழலில் காய வைத்து பிறகெடுத்து இடித்துச் சூரணமாய்ச் செய்து கொள்ளவும். அதிலிருந்து மூவிரலளவு எடுத்து தேனில் கலந்து சாப்பிடவும். அவ்வாறு காலை, மாலை உட்கொள்ள தேளின் விடம் ஏறும் வேகம் போல காய சித்தியாகும்.

342. 40 நாட்கள் அவ்வாறே சாப்பிட மூன்று நோய்கள் போகும். வயிற்றிலுள்ள கிருமிகள் தீரும். கண்கள் பவழம் போல சிவக்கும். உடலெல்லாம் செம்பழத்தின் வாசமாகும். வானத்திலுள்ள மீன்கள் அனைத்தும் பகலிலும் காட்சியளிக்கும்.

343. **வேம்பு:-** நூறாண்டு வயதுடைய வேம்பினை எடுத்துப் பட்டையை வெட்டி துண்டு துண்டாய் ஆக்கி நிழலில் காய வைத்து பின் இடித்து முறைப்படி சூரணமாய்ச் செய்து கொள்ளவும். அதில் கரிசாலை, மல்லிகை இவற்றின் சாற்றினை ஊற்றி கலந்து கொள்ளவும். இவ்வாறே ஏழு முறை பக்குவப்படுத்தி வைக்கவும். அதிலிருந்து மூவிரலளவு உட்கொள்ளவும்.

344. அவ்வாறு அச்சூரணத்தை உட்கொள்ளும் போது அதற்குக் கொள்ளும் அனுபான வகைகள் கீழ்வருமாறு. ~~இஞ்சித்~~ மலைத் தேனில் குழைத்து காலை, மாலை, 40 நாட்களுக்குச் சாப்பிடு. உடலெல்லாம் கருங்காலி மரம் போல் வயிரமாகி வன்மை பெறும். நரை, திரை நீங்கும். சுக்கிலம் கீழ்நோக்கிப் பாயாது கட்டும். ஆறு இடங்கள் வெளியாய்த் தோன்றும். எமனும் வருவதற்கு அஞ்சுவான்.

345. <u>சர்க்கரை வேம்பு</u>:- மலையிலிருக்கும் சர்க்கரை வேம்பின் காயைச் சாப்பிட கற்கண்டு போன்றினிக்கும். சர்க்கரை வேம்பின் இலையை 40 நாட்கள் சாப்பிட காயசித்தியாகும். காயைச் சாப்பிட பூதத்தில் சித்தியாகும். இதன் பட்டையையும் பழத்தையும் சாப்பிட வாரத்தில் சித்தி கிடைக்கும். வேரினை உட்கொள்ள ஒரு நாள் சித்தியாகும். இத்துணை சிறப்பு மிக்க இதனை அறிந்து பயன்படுத்திக் கொள்ளவும்.

346. <u>கற்றாழை</u>:- செங்கற்றாழையை எடுத்து வந்து 40 நாட்கள் காலை மாலை முறைப்படி சாப்பிட உடலானது கஸ்தூரி மணத்தைப் பெறும். உடலில் வியர்வை வராது. நரை, திரை வராது. சோம்பல், தூக்கம், கொட்டாவி அனைத்தும் இல்லை. உடம்பில் காமம் அதிகமாகும். கண்கள் செவ்வலரிப் பூப் போன்றாகும்.

347. கற்றாழைச் சோற்றினை எடுத்து, சூதத்தினை அனலில் வைத்து அருக்குத் சூதமானது மணி போலாகும். பலவகை பாடாணங்களும் கட்டிப்போகும். தங்கத்தை உருக்கிச் சிலக்க செம்பாகும். காரீயமும் செம்பாகும். இவ்வாறே நாதாக்கள் பார்த்து செய்தார்கள்.

348. மலைகளிலே இருக்கும் மூலிகைகளில் கருநெல்லி கருநொச்சில், காட்டுத்துத்தி, கஞ்சா, எருமைவிருட்சம் கருநீலி, அணாங்கன் விருட்சம், கொடிவேலி ஆகியவையும்

349. செந்திராய், வெண்புரசு, வெள்ளைக்கண்டங், செங்கள்ளி செம்பல்லி, குண்டலமாம்பால் பொற்சீந்தில், தில்லை, சாதுவேளை, கருப்பு வாழை, கந்திராய், கரிசாலை, கருமத்தை, வெங்கரந்தை, கல்வாழை,

350. மூலிகைக் குருத்து கவிழ்தும்பை, வெள்ளை விட்டுணுகிரந்தி ஆதண்டை, ஆகிய முப்பத்திரண்டு மூலிகைகள் மலைகளில் கிடைக்கும். ஒவ்வொரு மூலிகைகளிலும் பலவித வேதைகள் நடக்கும். ஒரு சில மூலிகைகளில் சூதமானது கட்டும். சில மூலிகைகளின் வாசனைக்குப் பாடாணங்கள் சாகும்.

351. அறுபத்து நான்கு சரக்குகளும் வெவ்வேறு மூலிகைகளினால் வேதையாகும் திறத்தை அறிந்து கொள்ள வேண்டும். உபரசங்கள் 120லிருந்தும் சத்து இறங்கும். இவ்வணங்கள் இருபத்தைந்திலும் சரக்கு கட்டாகும். மதத்தை இளக்க வைத்து தோலினை நீக்கும். வளர்ச்சியுறும்.

352. கிளிமூக்கு மரத்தில் கிளி போன்று காய் காய்க்கும் அரசினை போல இலை இருக்கும். இம்மரத்தில் பழுக்கும் பழத்தைச் சாப்பிட்டால் ஆகாயத்தில் பறக்கக்கூடிய சித்தினைப் பெறலாம். காயசித்தி எளிதில் பெறலாம். தோல் மாறும். புத்துணர்ச்சி கிடைக்கும்.

353 ~~[illegible]~~ மருந்தினை எடுத்து காலை, மாலை 40 நாட்கள் உட்கொள்ள உடலானது கெட்டுப்பட்டு வன்மையுற்று தங்கம் போன்ற மினுமினுப்பைப் பெறும். நாடியெல்லாம் முறுக்கேறி உடலின் வெப்பம் அதிகமாகும். பித்தம் நீங்கும். கபத்தைப் போக்கும். பிரந்தி நீங்கும். சரசுவதி நம் முன்னே தோன்றுவாள். வாக்கானது வினை போல ஆவியாகும்.

354. பொற்சிந்தில் கிடைத்தால் மிகவும் நல்லது. அப்படி கிடைத்தால் சிவப்பான பொற்சிந்தில் கிடைத்தால் நல்லது. அது கிடைக்காவிட்டால்

354. கிடைக்கும் சீந்திலின் மேல்தோலை நீக்கிக் கொள்ளவும். பிறகு பெரிய துண்டுகளாய் வெட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். பிறகு அதனை முறைப்படி சூரணமாய்ச் செய்து அதற்குச் சமமாய் கற்கண்டு சேர்த்து அதில் மூவிரலளவெடுத்து காலை மாலை உட்கொள்ளவும். அவ்வாறு 40 நாட்கள் சாப்பிடவும்.

355. அவ்வாறு சாப்பிட மேகத்தின் அனைத்து வகைகளும் தீரும். வாத பித்தம் தீரும். கபாலத்தின் வெட்டை நீங்கும். அஸ்தி சுரம் எனும் எலும்புச் சுரம் போகும். அக்கிலம் கெட்டிப்படும். தேகம் வன்மையுறும். ஆகாரம் ~~வியுவுதலை~~யும். வெப்பம் அதிகமாகும். சீந்திலுக்குச் அடிபட்டவர்களுக்கு சிறப்பேதுமில்லை. பெரின் பமாகிய சாத்திரத்தைப் பார்க்கவும்.

356. <u>நெல்லி</u>:- நெல்லிக்காயில் முற்றியவற்றை எடுத்துப் பசும்பால் ஊற்றி வேகவைத்துக் கொள்ளவும். அதனை நிழலில் காய வைத்து சூரணமாய்ச் செய்து கொள்ளவும். பிறகு சுத்தம் செய்த கெந்தகத்தைச் சமமாய் சேர்த்து தேனில் குழைத்துச் சாப்பிடவும். அவ்வாறு 40 நாட்கள் சாப்பிட தேகம் வலுப்பெற்று சிவசக்தி தேகமாகும். ஆன்மீகம் மிக்க உடலாகும்.

குறிப்பு:- [375-375ம் பாடல் பொருள் இல்லை எடுத்துக் கொள்ள வேண்டும்]

357. சுத்தி (சுத்த) எதுவென்றால் சொந்தகம் என்று தான் கூற வேண்டும். தனிமையாகிய இனம் தான் சூதமாயிற்று. புத்தி எதுவென்றால் அது தான் மூலம். ஆதாரத்தை நினைத்துப் பார்ப்பாயாக. அறிவுக்குள் புதைந்து கிடப்பது தான் புத்தி. இறைவனின் பாதத்தில் பற்றினை வைப்பது தான் பக்தியாகும். முக்தி என்று சொல்லப்படுவது மௌனமாக இருப்பதுதான். தானும் தலைவனும் ஒன்றென நினைக்கும் அந்நிலைப்பையே முக்தி என்று கூறுவர்.

அ.எ. 375. இராமதேவர் பலதிரட்டு

சி.7.91.

358. ~~அண்ட பற்பம்~~ :- மற்றொரு கலவைக் கூறுகிறேன்! கீழ்வருமாறு. சிப்பியை எடுத்து அதற்குச் சமமாக சாரத்தைச் சேர்க்கவும். சுத்தமான சங்கினைப் பாதியளவு சேர்த்து பாறு வெள்ளருந்தண்ணீர் (நெருப்புத் திராவகம்) அரைத்து உருட்டி குளிகைகளாய்ச் செய்து வெயிலில் வைத்து காய வைத்துக் கொள்ளவும். அதற்கு வலியதாய் சீலை மண் செய்து கொள்ளவும்.

பாடல் எண் 577

359. கவசத்தை நிதானமாய் எடுத்து அக்கினியை நினைத்து புடத்தைப் போடவும். குறிப்பிட்ட நேரம் கழித்து ஆறிய பின் எடுத்துப் பார்க்க பற்பமாய் ஆகியிருக்கும். பற்பத்தைப் பத்திரப்படுத்தி சற்குருவைத் தொழுது

பாடல் எண் (578)

359. ஒரு தயிலத்தில் 488 மி.கி பற்பத்தைக் கொடுத்து சாப்பிடவும்.

360. பத்தியம்: மேற்சொன்ன பற்பத்தை உட்கொள்ளும் போது எவற்றைக் கையாள வேண்டுமென்பது கீழ்வருமாறு. அவையாவன. எண்ணெய், புளி, மீன், இறைச்சி ஆகிய இவை நான்கையும் நீக்கி மோட்சத்தை, சிவ பதத்தை அடையும் வழியைப் பார்ப்பாயாக! மனதிலுள்ள தீய எண்ணத்தை நீக்கி கருணையைக் கொண்டு சிவத்தினை நினைத்து பூசைகள் காலை, மாலை செய்தால் உடலிலுள்ள வெப்பம் நீங்கும்.

பாடல் எண் 579

361. உடலிலுள்ள வெப்பமானது நீங்கினால் இறைவி கொடுக்கும் சோதனைகள் நீங்கும். சிவ விந்து கிடைக்கும். சக்தியை நீ பூசை செய்தால் காய கற்பத்தைச் சாப்பிட்டால் சிவன் போன்று உடல் வன்மை பெறும். சித்து விளையாட்டுகள் கைவரப்பெறும். சக்தியையும் சிவனையும் வழிபட கருணை கிடைக்கும்,

பாடல் எண் (580)

362. சிவ சக்தி பூசை செய்வதாக நினைத்து மனிதர்கள் உலகில் சிவமாகிய தண்ணீரை நெருப்பால் எரித்தார்கள். சாம்பலாகி உடலில் வாயு அதிகமாகும். அதை அடக்க முடியாமல் தண்ணீரைத் தள்ளிப் போடு, அறிவில்லாதவர்கள் தான் இதனைப் போற்றுவார்கள்.

பாடல் எண் (581)

பாடல் எண் (582)

363. சக்தி எது என்று அறியாத மனிதர்கள் பெண்களின் மாதவிடாயைச் சக்தி என்று தவறாக நினைத்து பெண்ணைக் கூடி இன்பம் கொண்டு மகிழ்வர். அதனால் அவர்களுக்கு உடலில் வெப்பம் அதிகமாகி இடைவிடாத இருமல், ஈளை, காசம் ஆகிய நோய்களால் வேதனையடைவர். அவர்களின் உடல் இவற்றால் அழிந்து போகும்.

பாடல் எண் 583

364. அழிவில்லாத இரசத்தைச் சாப்பிட்ட உடலானது அழியாது. நெருப்புக்கும் நீருக்கும் அசைந்து கொடுக்காது. மூலமாம் விந்துவென்பது ~~காந்தமென்றால் அது~~ புளி; சிறுநீரென்றால் உப்பு; தெளிந்த சிறுநீருடைய உப்பினை நீ உட்கொண்டால் உடல் வன்மையுறும். இது சிவனின் ஆணையாகும். இதனை இழிவு செய்யாமல் உணர்ந்து கொண்டால் கற்பத்திற்கும் உறுதி. கற்பமென்பதும் நிச்சயம்.

பாடல் எண் 584

365. புளி, உப்பு இவை இரண்டும் சக்தி, சிவம் என்றாகும். இவை இரண்டும் தான் உடல், உயிர் என்று ஆகும். சூரியன், சந்திரன் ஆகிய இரண்டும் இவை தானோ சடர் எங்கிள்ளாது என்று குருவிடம் கேட்டு அவனருளால் தெரிந்து கொள்.

கொடுமுடியான த்தில்

அடைந்தான் பூரணமாகும்.

366. <u>கடுக்காய்ச்சூரணம்</u>:-

கர்ப்பத்திற்கான மற்றுமொரு முறை கீழ்வருமாறு.
பாடல் எண் 611 புலத்தியரின் அருளினால் சிற்பமாகிய ஒரு உயிரை
அது பிறந்து இறந்தவுடன் எடுத்து கோரையைப்போக்கி
காய வைத்துக் கொள்ளவும். உப்பு, மஞ்சளைச்சேர்த்
-து அரைத்துப் பிசறிக் கொள்ளவும்.

367. பிசறியதை நன்றாய்க் காய வைத்துக் கொள்ளவும்.
பிறகு இடித்து மாவாக்கிக் கொண்டு பாத்திரத்தில்
பாடல் எண் 612 காடியை ஊற்றி அம்மாவினைப் போட்டு பிசைந்து
இறுத்துப் போட்டுக் கொள்ளவும். இவ்வாறே பத்து
முறையும் செய்து வெயிலில் உலர வைத்துக்
கொள்ளவும். அதனை நன்றாயரைத்து வடிகட்டி பத்திரப்
படுத்தவும்.

368. இச்சூரணத்தின் எடைக்குப் பாதி அளவு
உப்பினைச் சேர்க்கவும். மிளகு, சீரகம் இவற்றைத்
பாடல் எண் 613 தனியே எடுத்துப் பொடித்துச் சூரணத்தில் கலந்து
கொள்ளவும். நன்றாகக் கலந்து சிமிழில் வைத்து
சற்று வைத் தியானித்துக் கொள்ளவும். கடுக்காய்ச்
சூரணத்தில் 250 மி.கி அளவு எடுத்துச் சாப்பிடவும்.

369. அவ்வாறு உட்கொள்ள ~~[illegible]~~ கழியாமல் உள்ள மலசினங்கள் கழியும். உடலில் பலம் கூடும். கடுக்காய் வேரினை விருப்பத்துடன் உட்கொண்டால் உடலுக்கு அழிவில்லை. புத்தியைக் கொடுக்கக் கூடிய கற்பம் பிரம்ம கற்பமாகும். இவ்வுலகில் பெரிய மீனுக்குச் சிறிய மீன்தான் இரையாகிறது. இவ்வுலக இயல்பை நினைத்து மக்கள் தயங்குகின்றனர்.

பாடல் எண் 614

370. சாத்திரங்களை எடுத்துப் பார்த்து பக்தியுடன் கடுக்குருவை அறிந்து ~~இ~~ மனத்தினை அடக்கி விருப்பத்துடன் மேற்சொன்ன சூரணத்தில் 4886.கி அளவு உட்கொள்ளவும். அமிர்தத்தில் சூரணத்தைச் சாப்பிட உடலுக்கு உறுதியாகும்.

பாடல் எண் 615

371. உறுவதற்கு மற்றுமொரு உறுதியினைக் கேட்பாயாக! குருவான ~~இ~~ச் சூரணத்தில் 4886.கி அளவு எடுத்து ~~உட்கொள்ள~~ சிறுநீரில் உட்கொள்ள உடலுக்கு ~~கூ~~ பலத்தைக் கொடுக்கும். 160 நாட்கள் ~~உட்~~ கொள்ள நரைகள் உதிர்ந்து போகும். விந்து வானது கட்டிப் போகும். உடலானது வன்மையுற்று ~~[illegible]~~ நலமாகி தூய்மைபெறும்.

பாடல் எண் 616

372. காரியக்கட்டு :- வேதை.

பாடல் எண் 573

காரியத் தகட்டின் மீது செந்தூரத்தை வைத்து அதனை எடுத்து தட்டில் வைத்து இறைவனை வணங்கிக் கொள்ளவும். பிறகு தட்டில் வைத்ததை எடுத்து 1000 வரட்டியில் வைத்து புடம் போடவும். அடுப்பில் மேல் வைத்து பக்குவமாய் எரித்து ஆறிய பின் எடுத்துப் பார்க்க காரியத் தகடானது உருகி உறுதிமிக்க தங்கமாய் ஆகியிருக்கும்.

373. மேற்குறிப்பிட்ட காரியத் தங்கத்தைத் தகடாகத் தட்டி புடத்தினில் வைக்க. புடத்தை எரித்து ஆறிய பின் எடுத்துப் பார்க்க தங்கமாய் ஆகியிருக்கும். தங்க மாற்று ஐம்பத்தொன்றாகும். அத்தகு சிறப்பான தங்கத்தை எடுத்து பத்திரப் படுத்தி வைக்கவும்.

பா.எண் 574

374. மற்றுமொரு தயிலத்தைக் கூறுகிறேன்! கேட்பீராக! குருவானதும் திருவானதுமான சிறிய பூண்டு. நல்லதான பூண்டினை எடுத்து அதிலுள்ள கணுக்களை நீக்கி சிறியதாய் நறுக்கிக் கொள்ளவும். வெயிலில் வைத்து உலர வைத்து பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

பா.எண் 575

375. மேற்சொன்ன அப்பொருளுக்குச் சமமாக முட்டையைச் சேர்த்துக் கொள்ளவும். நான்கிலொரு பங்கு கற்பூரத் -தையும் சேர்த்து பாத்திரத்தில் போட்டுக் கொள்ளவும். அதனை ~~[illegible]~~ முறைப்படி குழித்தயிலம் இறக்குவதற்குரிய உபகரணங்களை வைத்து குழித்தயிலமாய் இறக்கிக் கொள்ளவும். அதனைக் குப்பியில் அடைத்து பத்திரப்படுத்தி இறைவனை நினைத்துத் தியானித்து குரு பதத்தை நினைத்து உபயோகப் படுத்திக்கொள்ளவும்.

பா.எண் 576

S.O. எண் 341. உரோமரிஷி பாடல் 515 - (1)

376. கௌரிச் செந்தூரம்:- 35கி கௌரியை எடுத்து செய்நீரில் அருக்குக் கொடுத்துக் கொள்ளவும். மூன்று மணி நேரத்தில் கௌரி கட்டும். கட்டிய கௌரியைக் கல்வத்தில் போட்டு அதனுடன் தாளகத்தையும் மனோசிலையையும் கெந்தகத்தையும் வெடியுப்பையும் நாகத்தையும் வகைக்கு 8.75கி எடுத்துச் சேர்க்கவும்.

பா.எண் 146

377. கல்வத்தில் செம்பருத்திப் பூச் சாற்றை விட்டு 12 மணி நேரம் அரைத்துக் மைபோலானவுடன் வழித்து உருட்டி உலர வைத்துக் கொள்ளவும். பின் அதனைப் பொடித்து காசியென்ற குப்பியில் போட்டு வாலுகா எந்திரத்தில் வைத்து முன்போல மீண்டும் தாளிக்கின் வைக்க.

பா.எண் 147

378. தாளிக்குள் இரண்டு விரல் கன அளவுக்கு,
பா.எண் 148 நன்றாக பொடித்த உப்பினை நிரப்புக. பின்
குப்பியை நன்கு சுற்றிக் கட்டிக் கொள்ளவும்.
கழுத்தளவு மணலினை நிரப்பி இறைவியை வேண்டி
அடுப்பேற்றி எரிக்கவும்.

379. முதல் மூன்று மணி நேரத்தில் ஒரு விறகு கொண்டும்
~~[illegible]~~ அடுத்த மூன்று மணி நேரத்தில் இரண்டு விறகு
பா.எண் 149 கொண்டும் அடுத்த மூன்று மணி நேரத்தில் மூன்று விறகு
கொண்டும் எரித்து இரவுக்காலம் முழுவதும் ஆறப்
போடுவாயாக! மூன்று நாட்கள் ஆற வைத்துப் பிறகு
நான்காம் நாளில் குப்பியை வெளியே எடுத்துப் பார்க்கவும்.
செந்தூரமாய் ஆகியிருக்கும்.

380. குப்பியை இறைவியின் முன் வைப்பாயாக! வடுகனுக்குப்
பா.எண் 150 பூசை செய்க! அவளின் பாதத்திற்குத் தாமரை மலரால்
அர்ச்சனை செய்து கொள்ளவும். மூச்சினை இழுத்து
விடவும். சிவா சிவா என்று கூறி தீபத்தைப் பார்த்து
மேற்குறிப்பிட்ட செந்தூரத்தை 130 மி.கி அளவு
உட்கொள்ளவும்

381. அவ்வாறே 40 நாட்களின் உட்கொள்ள உன்னுடைய
பா.எண் உடலானது ஒளி பெறும். சித்தர்களுக்கு இச்செந்
151 -தூரம் கண்ணைப் போன்றது. அவர்க்காக நான் மனதிறந்து
கூறினேன். பச்சரிசிச் சோற்றையும் பாலையும் சேர்த்து
பத்தியமாய் நீ சாப்பிட்டு வர நரம்பனைத்தும் இறுக்க
-மாகும். இதற்கு ஈடான கற்பம் வேறெதுமில்லை.

382. கற்பங்கள் பல உள்ளன. அதில் நானும் உணர்ந்து
பா.எண் தெளிந்து கூறியுள்ளேன். இவைகளையே விட
152 மாட்டாமல் இன்னமும் கூறுகிறேன் கேட்பீராக!
உடலானது வலிக்காது. மாறாது. இச் செந்தூரத்தினால்
உடல் இறுகும். அழிவிருக்காது. இறைவி கொடுக்க
நானும் சாப்பிட்டேன்.

அ.எ. 710 (518A) தன்வந்திரி கலைக்கியானம் தெண்டகம்

383. மற்றுமொரு செய்தியைக் கேட்பாயாக! கருவான
பா.எண் பொருட்களை வெளிவிடாது உன் மனதில் வைத்து
58 உண்மையாகிய பூரணத்தைப் பூசை செய்வாயாக!
பெண்களின் மயக்கத்தால் அறிவிழந்து போகாதே.
நீ அழிந்து போவாய். வாலைப் பெண் தெய்வத்தை
வணங்கினால் பொருள் கிடைக்கும்.

384. பொருளாகிய மெய்மையைப் பூசை செய்வாயாக!
பராபரத்தை நினைத்துத் தியானம் செய்வாயாக!
மகேந்திரகிரியை அடைந்து சிறப்புமிக்க ரிஷிகளைக்
பா. எண் 59 கண்டு தரிசித்து அவர்கள் பாதங்களைப் பணிந்து
அதைத் தாண்டிச் செல்ல
போற்றுவாயாக! அங்கு உள்ள ஒரு குளத்தில் சுனை
ஒன்று உள்ளது. அச்சுனையின் அருகில் வெண்சாரை
அதிகமாய் இருக்கும்.

385. அம்மகேந்திர மலையிலுள்ள வெண்சாரையை ஒருவரும்
காணமாட்டார்கள். முனிவர்களும் பார்க்க
மாட்டார்கள். அக்ரகாரம் எனப்படும் பிராமணர்
பா. எண் 60 குடியிருப்பில் உள்ள பிராமணப் பெண்களும் பார்க்க
மாட்டார். நாதாக்களும் காணமாட்டார். அனைத்து
உலகங்களும் மகேந்திர மலையை ஒரு நொடிக்குள்
சுற்றி வரும். அந்தக் மலையிலுள்ள சாரையைப்
பற்றிக் கூறுகிறேன் கேட்பீராக!

386. மகேந்திரகிரி மலையைப் பற்றி தெரிந்தவர்கள் அம்மலையில்
பா. எண் 61 குகை ஒன்று உள்ளது. குகையின் அருகே கிணறு ஒன்று
உள்ளது. அங்கு கொடிவேலி, கருநெல்லி இவை அதிகமாக
இருக்கும். நாதாக்கள் ஒருவரும் அதைப் பார்க்க மாட்டார்கள்.
சித்தர்களுக்குத் தான் தெரியும். அவர்கள் தான் பார்ப்பார்கள்.
அம்மலையிலே அதிகமான சாரை உள்ளது. அதிலுள்ள
அதிசயமான தன்மையைக் காண்போம்.

387. மயேந்திரமலையில் வெண்சாரையானது ஒருபக்கமாக இருந்து பின் மற்ற பக்கங்களுக்கும் பரவிக் கொண்டே போகும். அம்மலையிலுள்ள ஒரு அணையில் 40 நாட்கள் நீ தியானம் செய்வாயாக! வெண்சாரையை நீ பார்ப்பாய். மைந்தனே! நீ அதனை அறிந்து கொள்வாய். அட்டகர்மத்தில் ஒன்றாகிய தம்பனத்தைச் செய்து செயித்துக் கொள்வாய்!

பா.எண் 62

388. மந்திரத்தை ஓதி நடுவில் பிடித்தால் தலை, வாலும் அதாவது முதலும் நுனியும் போய்விடும். நடுவிலுள்ள துண்டத்தைச் சாப்பிட இறப்பில்லை. கோடி யுகங்கள் வாழலாம். ஆதியான இறைவன் ~~இதி~~ சில முறைகள் உரியுள்ளார். அவற்றிற்குப் பெயர் கற்பமாகும். ஆதி குருவான சிவனின் கற்பம் இது. யார் இதனைச் சாப்பிடுவார்கள்.

பா.எண் 63

~~சு.எ. 550. தட்சிணாமூர்த்தி காவியம்~~

சு.எ. 550. தட்சிணாமூர்த்தி காவியம்

389. கருநாணிகற்பம்:- மற்றுமொரு கருவைக் கூறு-கிறேன் கேட்பாயாக! கருநாணி அண்டத்தை வாங்கி தண்ணீர், பசும்பால் சேர்த்து வேகவைத்துக் கொள்ளவும். அதனைத் தேனில் போட்டுக் கலந்து கொள்ளவும். அதனைக் காலை, மாலை உட்கொள்ள உடல் வன்மையுறும்.

பா.எண் 335

390. இந்திரியம் கட்டும். மூச்சானது நெறிமுறையுடன்
பா.எண் செயல்படும். கடிவரச அமிர்தத்தை உட்கொள்ளு
836 -வாய். அனைத்து கலைகளையும் மனதில் கொள்ளவும்.
முழுமையாய் மனதில் கொண்டால் அறிவு பூரணமாய்
வரும். மௌனமாகும். இட்சமதைக் கொள்ளலாம்.

391. <u>மயிலண்ட கற்பம்</u> :- மயிலின் முட்டையை
வாங்கி அதனைக் கட்டுவதற்கான முறையைக் கேட்
பா.எண் -பாயாக! பொடியுப்பு, இந்துப்பு, சாரம், கற்பூரம்
837 ஆகிய சரக்குகளைச் சேர்த்து சிறுநீரினால் அரைத்து
சந்தனம் போன்று நன்கு அரைத்து அதனுள் மயிலின்
முட்டையை வைத்து தண்ணீர் விட்டு வேகவைத்துக்
கொள்ளவும்.

392. வேகவைத்து தக்க நேரங்கழித்து எடுத்துப் பார்க்க.
முட்டையின் இரண்டு கருக்களும் உருகி கட்டும்.
பா.எண் அதை எடுத்து அமிர்தரச பானத்தைச் சேர்த்துத் தேனை
838 -யும் சேர்த்து வெயிலில் ஐம்பது நாள் வைக்கவும்
பிறகு எடுத்து காலை, மாலை உட்கொண்டால்
சதை, நரம்புகள் வலுப்பெறும்.

பா.எண் 339

393. மோட்சகெதி என்றால் என்னவெனில் இவ்வுலகில் வாழும்வரை துன்பத்தில் சிக்காது எப்போதும் பூரணத்தை நினைந்து இறைஎழுத்தில் மனதை வைத்து மூச்சை நெறிமுறைக் கட்டுபடுத்தி விண்ணை நோக்கி மூலமான உச்சி மீதுள்ள பரத்தையும் சோதியையும் கண்டால் மோட்சமாகும்.

சு.எ. 612. கைமுறை மருத்துவச்சுவடி - பாகம் 1.

பா.எண் 11

394. வெள்ளைக்கல் கற்பம் :- வாதத்திற்கு ஆதியான மருந்து முறை கீழ்வருமாறு. வெள்ளைக்கல், பிரம கற்பம், பாறையுப்பு ஆகிய மூன்றும் சேர்ந்தால் முப்புவாகும். சுவுக்காரம் வழலை என்று கூறுவார்க்கு மறைப்பார்கள் சித்தர்கள்.

பா.எண் 12

395. முப்புவின் முறையை நீ கேட்பாயாக. அகத்தியர் பூரணத்தில் பூநீற்றின் பற்றும் வெள்ளைக்கல்லின் வளர்ப்பும் அத்திமுறையும் கூறியுள்ளார்கள். பங்குனி மாதத்தில் பார்த்தால் கடலில் கதிர் (சூரியன்) இருப்பது போல் வளர்ந்திருக்கும். மண் அதில் இல்லாதவாறு எடுத்து 5. உவி அளந்து ஒரு பாத்திரத்தில் போட்டுக் கொள்ளவும்.

396. உ.6வி கல்லுப்பு, கல்சுண்ணம் உ.6வி, சிறுநீர் 10.4வி
பா.எண் 13 நல்லெண்ணெய் 325 மி.லி எடுத்து அனைத்தையும் ஒன்று சேர்த்து நன்கு கலக்கி தெளிவினை இறுத்துக் கொள்ளவும். அடுப்பேற்றி வைத்து எரித்து உப்பாய்க் காய்ச்சிக் கொள்ளவும். மீண்டும் சிறுநீரினை விட்டு கலக்கி தெளிவிறுத்து காய்ச்சவும். இவ்வாறு பத்து முறை காய்ச்சிச் சவுக்காரக் குருவாகும்.

397. <u>காயசித்தி கற்பம்</u>:- கற்பமென்றால் இவையெல்லாம் கற்பமல்ல. காயசித்திக்கேற்ற கற்பத்தைச் சித்தர்கள்
பா.எண் 348 கூறமாட்டார். காட்ட மாட்டார். எளிதாய்ச் செய்ய முடியாது என்பர். அதையும் தெளிவாய்க் கூறமாட்டார். அப்படியே கூறினாலும் குருவினை மறைத்துச் சொல்ல மாட்டார். தங்களுடைய கைப்பொருளைச் (பணத்தை) செலவழித்து அலைந்தலைந்து சோர்வார்கள். இவர்களுக்காக இறப்பினை நீக்கும் ஓர் சில கற்பத்தைக் கூறுகிறேன்.

398. ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி சாதிக்காய்,
பா.எண் 349 முதல் தரமான நாகத்தில் கற்பூரத்தைப் பொடித்துச் சேர்த்து அதற்குச் சமமாக இரசத்தையும் உடன் சேர்க்க. ஒரு நாளைக்கு செம்பற்பம், இரு பற்பம் இவற்றை உ/துகி சேர்க்க. இவ்வாறு சேர்த்துக் கொள்ள உடலானது பொன்னாகும்; இவர்களுக்கு எப்போதும் இறப்பில்லை.

399. எமனும் இவர்களை அண்டாது. இதற்குப் பானம், வளர்த்து செய்நீர், சுராப்பானம், மத்தியா பானம் என்று கூறி 1008 மலர்களுக்குள்ளே சிறந்த வைராக்கிய மதியமூர்த்தம் என்று கூறாது இது சாகாது வேகாது ஐந்து பூதத்தில் நின்று என்றும் சித்தர்கள் பூசனை செய்யும் சிவனின் என்றும் கூறுவர். இதைத் தவிர வேறு இன்றுண்டு.

பா.எண் 350

400. காயாதி கற்பத்தை உட்கொள்ளுவதற்குரிய சரியான காலத்தைக் கூறுகிறேன்! கேட்பாயாக! ஆதி, அந்தம், நடு எனும் மூன்றுள் விளங்கும் பொருளைக் கேள்.. முதல் கற்பத்தை அகாரமாகிய அகார பீடத்தை யாரும் பார்க்க மாட்டார்கள். அகாரமாகிய பொருளைக் கேட்பாயாக!

பா.எண் 1012

401. அகாரம் தான் விந்துவாகும். இளிர்ச்சியான விந்து நீர் தண்ணீராகிவிடும். அந்நீரை எடுத்து காலை, மாலை உட்கொள்ளவும். குருவின் பாதத்தை மனதில் நினைத்து பிராணவாயுவை நாசியில் ஏறு வழியே போகச் செய்து நான் எனும் ஆணவத்தை நீக்கி அடக்கி அவாசத்தினை நின்றால் உடல் உறுதி பெறும்.

பா.எண் 1013

402) மன உறுதியுடன் 40 நாட்கள் உண்டிட, வாத பித்த சேத்துமம் வரும் வயிற்றில் நடமாடும். நரை திரையும் போகும். அதிகமான ஒளிப் பிரகாசித்து, ஒளியாக தடையின்றி பாடலாம். தடையில்லா மனதுடன்

பா.எண் 1014

தொடர்ச்சி

(402) இருக்கும், அச்சமும் இல்லையாய் ஆகலாம்.

(403) காயாதி கற்பம் வல்லாரை

ஆறு மாதகாலம் உலர்த்தி, தூளாக்கி கலசத்தில் பத்திரப்படுத்தி (குழந்தியவை) 5 கிராம் அளவு வல்லாரையைக் கொள்ள உடலானது வலுப்பெறும். இவ்வாறு காலையில் வல்லாரையும், மாலையில் கடுக்காயும் உண்ணலாம்.